பொதுசன நூலகம்

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 தை 23 வியாழக்கிழமை (05.02.2009) தொலைபேசி ,222 3378,. 222 7829 ஒலி 048

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

# புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீது கொத்தணிக் குண்டுத் தாக்குதல்

## ஐ.நா. அறிவிப்பு; அரசு மறுப்பு

(லண்டன்)

புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீது கொத்தணிக் குண்டு வீசப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட அதிகாரி கோர்டன் வைஸ் தெரிவித்துள்ளார். எனினும் அவரின் இக் கூற்றை இலங்கை வெளியுறவு அமைச்சின் செயலாளர் பாலித கோஹன்ன மறுத்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் விசேட பிரதிநிதி இலங்கைக்கு வருகிறார்!

(கொழும்பு)

இலங்கையின் பிந்திய நிலைவரங்கள் குறித்து அறிந்து கொள்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தனது விசேட பிரதிநிதி ஒருவரை இலங்கைக்கு அனுப்பவிருப்பதாக வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரேஷ்ட அரசியல் விவகார அதிகாரியான ரம்ரட் (12ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர் படுகொலையைக் கண்டித்து தமிழகத்தில் முழுக் கடையடைப்பு

### 8 ஆயிரம் பேர் வரையில் கைது

(சென்னை)

இலங்கை இனப்படுகொலையைக் கண்டித்து தமிழகத்தில் நேற்று அறிவிக்கப்பட்டிருந்த முழு அடைப்பு போராட்டம் பெருவெற்றி பெற்றிருக்கின்றது.

பொலிஸாரின் அச்சுறுத்தலைப் பொருட்படுத்தாமல் சென்னை தொடக்கம் தமிழகத்தின் கடைக்கோடி சிற்றூர்வரை அனைத்துப் பகுதிகளிலும் கடைகள், வணிக நிறுவனங்கள் போன்றவை மூடப்பட்டிருந்தன என தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

பேருந்துகள் (12ஆம் பக்கம் பார்க்க)

## சாலை பகுதியை சுற்றிவளைத்து படையினர் உக்கிர தாக்குதல்

### பாதுகாப்பு அமைச்சு தகவல்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள சாலை பகுதியை நோக்கி படையினர் தீவிர முன் நகர்வு முயற்சியினை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் அப்பகுதி முழுவதும் சுற்றி வளைக்கப்பட்டுள்ளதுடன் தாக்குதல்களும் தீவிரமடைந் (12ஆம் பக்கம் பார்க்க)

## நோயாளர்களை கொண்டு செல்ல இன்று 6 மணிநேர யுத்த நிறுத்தம்

### அரசு அறிவிப்பு

(லண்டன்)

வன்னிப் பகுதியிலிருக்கும் நோயாளிகளை வவுனியாவுக்கு அழைத்துச் செல்லும் பொருட்டு இன்று 6 மணித்தியாலங்கள் மோதல் தவிர்ப்பை மேற்கொள்ளப் போவதாக அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் தலைமைப் பணிப்பாளர் டாக்டர் அஜித் மெண்டிஸ் பி.பி. சிக்கு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

நாங்கள் வவுனியா மருத்துவமனையைப் பலப்படுத்தியுள்ளோம் அங்கு அறுவைச் சிகிச்சை வல்லுநர்கள், அனைத்து துறையிலும் சிறப்பு பெற்ற மருத்துவர்கள், இரத்தம் மற்றும் அறுவைச் சிகிச்சைக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் அனுப்பப்பட்டுள்ளன.

வன்னிப் பகுதியிலிருந்து வருகின்ற நோயாளர்களைக் (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு ஒபாமா வாழ்த்து

(வோஷிங்டன்)

இலங்கையில் சமாதானமும் செல்வமும் வளமும் பெருக அமெரிக்க அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் இணைந்து செயற்படும் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 61 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அமெரிக்க ஜனாதிபதியினால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் படையினர் மீது கரும்புலித் தாக்குதல்!

(லண்டன்)

வன்னியில் கேப்பாபுலவு என்ற இடத்தில் படையினரின் முன்னரங்க நிலைகள் மீது வெடிமருந்து நிரப்பிய ஊர்தியுடன் இரண்டு கரும்புலிகள் மோதி தாக்குதல் நடத்தியுள்ளதாக புதினம் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புக்கும் முள்ளியவளைக்கும் இடையில் உள்ள கேப்பாபுலவு (12ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டாலும் சவால்கள் முழுமையாக முடிந்து விடாது!

### சுதந்திர தின உரையில் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சிலர் தோல்வியடையச் செய்ய முடியாது என அடிக்கடி சொன்ன பிரிவினைவாத பயங்கரவாதத்தை இன்னும் சில நாட்களில் முற்று முழுதாக தோல்வியுறச் செய்வோம் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு.

ஆனாலும் எம்முன்னுள்ள சவால் முழுமையாக முடிந்து விட்டதாக நாம் சிந்திக்கக்கூடாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுதந்திர தின உரையில் தெரிவித்துள்ளார். அவரின் சுதந்திரதின உரை வருமாறு,

(07ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையின் 61 ஆவது சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முப்படைத் தளபதிகளினால் வரவேற்கப்படுவதையும், அணிவகுத்துச் செல்லும் பல்குழல் எறிகணைகளையும் படங்களில் காணலாம்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வன்னியில் மக்கள் மீது வீசப்படுவது "வெள்ளை பொஸ்பரஸ்" எரிகுண்டா?

## இணையத்தளங்கள் சந்தேகம் வெளியீடு



காசா பகுதியில் நடத்தப்பட்ட எரிகுண்டுத்தாக்குதல் படம்

வன்னி மக்கள் மீது படையினர் வெள்ளைப் பொஸ்பரஸ் எரிகுண்டுத் தாக்குதலை மேற்கொள்கின்றனரா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வன்னியில் கடந்த சில நாட்களாக பொது மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்கள் மீது படையினர் புதிய ரக எரிகுண்டுகளை பீரங்கிகள் மூலம் வீசித் தாக்குகின்றனர்.

இந்த எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கும் இடங்களில் மனித உடல்களும் கட்டடங் களும் மரங்களும் கூட தீப்பற்றி எரிவதுடன் பாரிய சேதங்களும் ஏற்படுகின்றன.

படையினர் வெள்ளைப் பொஸ்பரஸ் (White phosphorus shells) சேர்க்கப்பட்ட அதியுயர் வெடிமருந்து கொண்ட எரிகணைகளை பீரங்கிகள் மூலம் ஏவுவது போல தாக்குதல் நடத்தப்பட்ட இடங்களை ஆராயும் போது தெரிவதாக கூறப்படுகின்றது.

சர்வதேச விதிகளின் அடிப்படையில் பொது மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் இந்த வகை எறிகணைகள் பயன்படுத்தப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த வகை எறிகணைகள் பொது மக்களுக்கு பாரிய எரிகாயங்கள் ஏற்படுத்துவதனால் 1980களில் உருவாக்கப்பட்ட ஜெனிவா சட்ட விதிகளிலும் (Under the Geneva Treaty of 1980) இந்த ஆயுதங்கள் பொதுமக்கள் வாழும் பிரதேசங்களில் பயன்படுத்தப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பு இதனை இரசாயன ஆயுதங்களின் பட்டியலில் சேர்த்துள்ளதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

வெள்ளை பொஸ்பரஸ் எறிகணைகள் வெடிக்கும்போது பாரிய புகை மண்டலங்களையும் தீயையும் உருவாக்கும் தன்மை கொண்டவை. இதன்போது ஏற்படும் எறிகணை சிதறல்கள் மனிதர்களின் தோல்களில் ஒட்டி எரிவதுடன் அதன் இரசாயனப் பொருள் உடலிலுள் பரவும் தன்மையும் கொண்டதாகும்.

வளிமண்டலத்தில் ஒக்சிசன் போதியளவில் இருக்கும் வரையிலும் பொஸ்பரஸ் துகள்கள் தொடர்ந்து எரியும் தன்மை கொண்டவையாகும்.

முன்னர், வியட்நாம் போரின் போது அமெரிக்கா இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்ட இந்த வகை எறிகணைகள் அண்மையில் இஸ்ரேலிய இராணுவத்தினரினால் காசா பகுதியிலும் பயன்படுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (எ-1)

## கோடா வைத்திருந்தவருக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதம்

(பருத்தித்துறை)

கசிப்பு உற்பத்திக்காக 450லீற்றர் கோடாவை வைத்திருந்தவருக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த பருத்தித்துறை நீதிமன்றம் அபராதப் பணத்தை செலுத்தத்தவறும் பட்சத்தில் 15 மாத கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டது.

அல்வாய் வடக்கு அல்வாயை சேர்ந்த கபில்ராஜ் நித்திலா என்பவரையே கசிப்பு உற்பத்திக்கான கோடாவுடன் பருத்தித்துறை மதுவரித்திணைக்கள பரிசோதகர்கள் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் படுத்தினர். சம்பந்தப்பட்ட நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதிமன்றில் எதிரிக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் அபராதப் பணத்தை செலுத்தத்தவறின் 15மாத கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என உத்தரவிட்டார். (ச-14,52)

## மட்டக்களப்பில் மூவர் துப்பாக்கி சூட்டில் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற இரண்டு வெவ்வேறான சம்பவங்களின் போது மூவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள அக்கறானையில் நேற்று முன்தினம் மாலை கால்நடைப் பண்ணைத் தொழிலாளியான இளையதம்பி ராதாகிருஷ்ணன் என்ற இளம் குடும்பஸ்தர் இனம் தெரியாத ஆயுத தாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

துறைநீலாவணையைச் சேர்ந்த இவர் தனது தொழிலின் நிமிர்த்தம் அங்கு தங்கியிருந்த வேளை கடத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதே வேளை நேற்று முன்தினம் மாலை வவுணதீவு பிரதேசத்திலுள்ள உன்னிச்சையில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டில் இரண்டு இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

மோதலின் போது கொல்லப்பட்ட இருவரும் விடுதலைப்புலிகள் என்றும் அந்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது சடலங்களுடன் கிளைமோர் குண்டு உட்பட சில ஆயுதங்களும் கண்டெடுக்கப் பட்டதாக பாதுகாப்பு தரப்பு தெரிவிக்கின்றது. (ச-5)

## தமிழகத்தில் தங்கியிருந்த விமானப்படையினர் திரும்பினர்

(சென்னை)

தமிழ்நாட்டில் உள்ள சென்னை தாம்பரம் விமான நிலையத்துக்கு பயிற்சி பெற சென்ற இலங்கை விமானப் படையினர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதியின் வேண்டுகோளை ஏற்று இந்திய அரசு இந்த திடீர் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு நேற்று முன்தினம் இரவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது;

இலங்கை விமானப்படையினர் சிலர் சென்னை தாம்பரத்தில் உள்ள விமானப் படை பயிற்சிக்கூடத்திற்கு வந்திருப்பதாகவும் அவர்களுக்கு பதிவு வழங்குமாறும் தாம்பரம் விமானப் படையினர் சோலையூர் காவல் நிலையத்தை கேட்டுக்கொண்ட செய்தி முதலமைச்சர் கருணாநிதிக்கு தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து அவரது அறிவுரையின்படி தலைமைச் செயலாளர் கே.எஸ். சிறிபதி மத்திய அரசின் பாதுகாப்புத் துறையுடன் தொடர்புகொண்டு அவர்களை உடன்டியாக திருப்பி அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

முதலமைச்சர் கருணாநிதியின் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு அந்த இலங்கை விமானப்படை வீரர்களை தமிழகத்தில் இருந்து திரும்ப அனுப்ப உத்தரவிட்டதுடன் அந்த செய்தியையும் முதலமைச்சருக்கு தெரிவிக்குமாறு கூறியுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## யாழ்.மாவட்டச் செயலகத்தில் சுதந்திரதினக் கொண்டாட்டம்




யாழ். மாவட்ட செயலகத்தில் இலங்கையின் 61ஆவது சுதந்திரதினம் நேற்றுக் கொண்டாடப்பட்டது.

நேற்றுக்காலை 8.30மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடக்கு மாகாண விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா இலங்கையின் தேசியக் கொடியினை ஏற்றிவைத்தார்.

இதன்போது தேசிய கீதம் தமிழில் இசைக்கப்பட்டது. இவ்வைபவத்தில் யாழ். அரச அதிபர் க.கணேஷ், மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி உட்பட மாவட்ட செயலக அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை யாழ். மாவட்டத்திலுள்ள அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் என்பவற்றில் தேசியக் கொடி பறக்க விடப்பட்டு இருந்தது.

இவ்வாண்டு யாழ். குடாநாட்டின் பிரதான வீதிகளில் உள்ள வீடுகளின் வாசல் களில் தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்ததுடன் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டிகள், தனியார் சிற்றூர்திகள், ஆட்டோக்கள் உட்பட தனியார் மோட்டார் சைக்கிள்கள் சிலவற்றிலும் தேசியக் கொடிகள் கட்டப்பட்டுக்காணப்பட்டன.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் வாகனங்களின் நடமாட்டம் மற்றும் பொது மக்களின் நடமாட்டமும் குறைவாகக்காணப் பட்டது. (ச)

## முல்லைத்தீவுக்கு படகுப் பயணம் தூத்துக்குடி சட்டத்தரணிகள் முடிபு

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதை தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்வரும் 9ஆம் திகதி படகு மூலம் முல்லைத்தீவு செல்வோம் என தூத்துக்குடி சட்டத்தரணிகள் சங்க கூட்டத்தில் முடிபுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்கள் மீதான தாக்குதலை தடுத்து நிறுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்கக் கோரி தமிழகம் முழுவதும் சட்டத்தரணிகள் மற்றும் மாணவர்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கைப் பிரச்சினை குறித்து ஆலோசிப்பதற்காக தூத்துக்குடியில் சட்டத்தரணிகள் சங்கத்தின் அவசர கூட்டம் நடந்தது.

தமிழகத்தில் இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கம் நடத்தும் அனைத்து போராட்டங்களுக்கும் ஆதரவு அளிப்பது என கூட்டத்தில் முடிபு செய்யப்பட்டது.

ரயில் மறியல் மற்றும் 7 ஆம் திகதி நடக்கும் கறுப்புக் கொடி பேரணியில் பங்கேற்பது, அதன் பிறகும் இப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்படாவிட்டால் எதிர்வரும் 9ஆம் திகதி தூத்துக்குடியில் இருந்து படகுகள் மூலம் முல்லைத்தீவு நோக்கி செல்வது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ச-5)


### வீடு வாடகைக்கு தேவை

கௌரவமான குடும்பம் ஒன்றுக்கு வீடு தேவை, யாழ். நகருக்கும் உரும்பிராய்க்கும் இடைப்பட்ட பகுதி விரும்பத்தக்கது. வாடகை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு:
PS ராஜா இரும்பு வாணிபம்,
மனோகரராச் சந்தி அருகாமை,
K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 0771529610.

(2230)


## மண்டபம் அகதி முகாமின் பாதுகாப்பு அதிகரிப்பு

### அகதிகள் வெளியே செல்லவும் தடை

(சென்னை)

தமிழகம் மண்டபம் முகாமில் தங்கியுள்ள இலங்கை அகதிகளிற்கு தொடர்ந்தும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

முகாமில் தங்கியுள்ள அகதிகள், முகாமிலிருந்து வெளியே செல்லவும் தடை விதிக்கப் பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் தமிழகத்திற்குள் ஊடுருவலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் தமிழக கரையோரப்பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடுவோரை கைதுசெய்யுமாறும் தமிழக கியூப் பிரிவு பொலிஸாருக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

தமிழகக் கரையோரப்பகுதியில் அண்மையில் கரை ஒதுங்கிய படகு தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை இழந்துவரும் நிலையில் அவர்கள் தமிழகத்திற்குள் ஊடுருவலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இவ்வாறான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தமிழகச் செய்திகள் தெரிவித்தன. (ச-14)

# இன்று ஒரு தகவல்

## சினத்தின் குணம்

ஒரு மனிதன் கோபப்படும் போது அவனை நன்றாக கவனித்துப் பாருங்கள். ஏதாவது ஒரு மிருகத்தின் சாயல் அவன் முகத்தில் தெரியும்.

அவன் புன்னகையுடன் இருக்கும் போதுதான் முகம் அழகாக இருக்கும். கோபம் மனதையும் கெடுக்கும். உடம்பையும் கெடுக்கும். கோபப்படுபவர்களின் ஆயுள் காலம் குறைகிறது என்பது விஞ்ஞான உண்மை.

அதே நேரம் சிரிப்பவர்களின் ஆயுள்காலம் அதிகரிக்கிறது என்பதும் விஞ்ஞான உண்மை. கோபப்படுபவர்களை யாருமே விரும்புவதில்லை. கோபப்படும் அப்பா, அம்மாவிடம் பிள்ளைகள் நெருங்காது.

கோபப்படும் அதிகாரியிடம் ஊழியர்கள் நெருங்க மாட்டார்கள். கோபப்படும் வாத்தியாரிடம் மாணவர்கள் நெருங்குவதில்லை.

சரி... இந்த கோபம் எதனால் வருகிறது? இயலாமையினால் தான் வருகிறது. நீங்கள் நினைப்பதை நிறைவேற்றக்கூடிய சாமர்த்தியம் உங்களிடம் இல்லை எனும் போது அது கோபமாக வெளிப்படுகிறது அவ்வளவுதான்.

திறமையுள்ளவன் கோப்படவேண்டிய அவசியமே வராது. ஒரு உண்மையான கவிஞனிடம் போய் ஒரு கவிதை எழுதிக் காட்டுங்கள் என்று சொன்னால் அவன் உடனே எரிச்சலடையக் கூடாது. எரிச்சல் வந்தால் அது அவனது இயலாமையைக் காட்டுகிறது.

சிற்பி சிலை செதுக்குவதற்காக கோப்படக்கூடாது.

ஓர் அதிகாரி சொன்னார்:

"நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான் சேர். இருந்தாலும் கோபப்படவில்லையென்றால் வேலை நடக்காது சேர். அதனால் தான் தினமும் அலுவலகத்தில் கத்திக் கொண்டு இருக்கிறேன்" என்றார்.

ஆனால் உண்மை என்ன தெரியுமா? கத்துவது தான் நடக்குமே தவிர அதனால் காரியம் நடக்காது. வேலை நடப்பது போல் ஒரு பாவனை நடக்கும். அவ்வளவு தான்.

தவறு செய்பவர்களுக்குத் தண்டனை கத்துவது மட்டுமல்ல. திட்டு வாங்கும் யாருமே தான் செய்தது தவறு என்று ஒத்துக் கொள்வதில்லை. அதை அவர்கள் உணர்வதுமில்லை. அப்படி இருக்கும் போது திட்டுவதனால் என்ன பிரயோசனம்? திட்டுவதன் நோக்கம் என்ன? திட்டுவாங்குபவர்கள் திருந்த வேண்டும் என்பது தானே!

நோக்கம் நிறைவேறாது என்றால் எதற்காகக் கத்த வேண்டும்? திட்டுவது மூலமாகவே ஒருவனைத் திருத்த முடியும் என்றால் திருடுபவனையெல்லாம் கூப்பிட்டு கொஞ்ச நேரம் திட்டி "போய் வா இனிமேல் நீ திருந்தி விட்டாய்!, என்று சொல்லிவிடலாமே! இதில் நாம் முக்கியமாகப் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்"

கோபம் என்பது நாம் அடுத்தவர்களுக்கு கொடுக்கும் தண்டனை அல்ல.

அது நமக்கு நாமே கொடுத்துக் கொள்ளும் ஒரு தண்டனை! அடுத்தவர்களைத் திருத்துவதாக நினைத்துக் கொண்டு நம்மை நாமே கெடுத்துக் கொள்ளும் ஒரு முயற்சி!

நமது மனம் கெட்டுப் போகிறது. நமது உடம்பும் கெட்டுப் போகிறது. அதுதான் கண்ட பலன்.

நம்ம ஆள் ஒருவன் சொன்னான்.

"நான் கோபம் வந்தால் அதை மனிதர்களிடம் காட்டுவதில்லை சேர்.... அவர்களைத் திருத்த முடியாது என்று எனக்குத் தெரியும்!" என்றார்.

"வேறு என்ன செய்வாய்?" என்று கேட்டேன். "வீட்டில் இருக்கும் பாத்திரங்களையெல்லாம் எடுத்து வெளியில் வீசிடுவேன்!" என்றான்.

"அதனால் கோபம் குறைந்ததா?" என்று கேட்டேன்.

"எனக்குக் குறைந்தது. ஆனால் எதிர் வீட்டுக்காரனுக்கு அதிகமாகி விட்டது" என்றான்.

"அது எப்படி" என்றேன்.

"நான் கோபம் வந்தவுடன் நேரா அவர்கள் வீட்டுக்குப் போய் அங்கிருந்து தானே பாத்திரங்களை வீசி எறிவேன்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப சவால்களுக்கு ஏற்ப இளைய தலைமுறையினரின் அறிவைப் பெருக்க வேண்டும்

## பேராசிரியர் விஸ்வ வர்ணபால தெரிவிப்பு

(கொழும்பு)

இன்றைய புதிய உலகத்தில் உயர் தொழில் நுட்ப கல்வியானது அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றாக உள்ளது.

அரச துறைக்காயினும் தனியார் துறைக்காயினும் இத் தொழில் நுட்ப அறிவின் பிரயோகத்தின் தேவைப்பாடு அவசியமாகும். வளர்முக நாடுகளுடன் நாம் போட்டி போடவும் அந்நாடுகளின் தொழில் நுட்ப துறைகளுடன் செயலாற்றவும் உயர் தொழில்நுட்ப அறிவு எம்மவர்க்கு இன்றியமையாத ஒன்றாக விளங்குகிறது.

எனவே கிடைத்திருக்கும் இவ்வரிய வாய்ப்பினை எமது இளைய தலை முறையினர் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு உயர் கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்வவர்ணபால தெரிவித்தார்.

ஒஸ்ரியா மற்றும் நெதர்லாந்து ஆகிய அரசுகளின் நிதியுதவி மூலம் கொழும்பு மட்டக்குளி மற்றும் காலி லபுதுவ ஆகிய இரு பிரதேசங்களில் இலங்கை உயர் தொழில் நுட்ப கல்லூரிகளின் அங்குரார்ப்பணம் மற்றும் செயற்பாடுகள் குறித்து விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பு திங்கட்கிழமை காலை கொழும்பு ட்ரான்ஸ் ஏசியா ஹோட்டலில் இடம் பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் கூறியதாவது,

மத்திய தரத்திலானதும் உயர் தரத்திலானதுமான தொழில் நுட்பவியலாளர்களை உருவாக்கும் நோக்குடனேயே மட்டக்குளி மற்றும் லபுதுவ ஆகிய இரு பிரதேசங்களில் உயர்தொழில் நுட்ப நிறுவனங்களை உருவாக்கி பயிற்சி வழங்கப் படவுள்ளது.

எமது தொழில் நுட்பமானது தேசிய மட்டத்தையும் கடந்து சர்வதேச தரத்திற்கு சரி நிகராக இருக்கும் வண்ணம் எமது இளைய தலை முறையினருக்கு உயர் தொழில் நுட்ப கல்வியை வழங்கவேண்டிய தேவையுள்ளது என்பதை கருத்திற் கொண்டே ஒஸ்ரியா, நெதர்லாந்து ஆகிய நாடுகளின் கூட்டுப்பங்களிப்புடனும் நிதியுதவியுடனும் எமது அமைச்சின் கீழ் குறித்த இரு பிரதேசங்களில் உயர் தொழில் நுட்ப நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன.

மத்திய தர தொழில் நுட்ப அறிவை மென் மேலும் உச்ச அளவிற்கு பிரயோகித்து நெடுந்தூரத்திற்கு நாம் பயனிக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

விஞ்ஞான பாட விதான ஆசிரியர்களுக்கும் இவ்விரு தொழில் நுட்ப நிறுவனங்கள் மூலம் சிறந்த பயிற்சி வழங்கப்படவுள்ளது.

நாறிவரும் உலகிற்கேற்பவும் விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய வகையிலும் எமது தொழில் நுட்பத்துறையை மாற்றியமைக்க வேண்டும்.

உயர்தர கல்வியுடனும், பல்கலைக்கழக மட்டத்துடனும் எமது மாணவர்கள் நின்று விடாது அதனையும் தாண்டி உயர் தொழில் நுட்ப அறிவை அவர்கள் பெற்றுக் கொண்டு சிறந்த தொழில் நுட்ப வியலாளர்களாகவும் கைதேர்ந்த பொறியியலாளர்களாகவும் உருவாக்கப்படுவதே இலங்கை உயர் தொழில் நுட்ப நிறுவனத்தினதும் எனது அமைச்சினதும் நோக்கங்களாகும்.

வெறுமனே அறிவைப் பெற்றுக் கொள்வதோடு மட்டும் நின்று விடாது தொழில் நிறுவனங்களில் தாம் பெற்றுக்கொண்ட அறிவையும் அனுபவத்தையும் பிரயோகித்து அவர்கள் பணிபுரிய வேண்டும் என்பதுவும் எமது மற்றுமொரு இலக்கு.

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கும் அத்தொழில் நுட்ப அறிவு உறுதுணையாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகங்களும் கிடையாது.

இன்றுள்ள மொரட்டுவப் பல்கலைக்கழகம் ஒருகாலத்தில் தொழில் நுட்பக் கல்லூரியாகவே செயற்பட்டது ஆனால்,

இப்போது பல்கலைக் கழகமாக மாற்றம் பெற்று சிறந்த பல்கலைக் கழகமாக இயங்கி வருகின்றது என்றார்.

இச்செய்தியாளர் சந்திப்பில் ஒஸ்ரியா மற்றும் நெதர்லாந்து நாடுகளின் தூதுவர்களும் கலந்து கொண்டனர். (ஓ-6)

# இராசி பலன்

05.02.2009
(தை23, வியாழக்கிழமை)
தசமி முற்பகல் 8.25 மணிவரை
ரோகிணி முற்பகல் 9.55 மணிவரை
ஏகாதசி பின்னிரவு 6.06 மணிவரை
இராகுகாலம் 2.05-3.35 மணிவரை
சுபநேரம் 8.05-9.35 மணிவரை
பீம ஏகாதசி விரதம்

| | |
|---|---|
| மேடம் | கல்வியில் ஆர்வம், மனச் சஞ்சலம், தனவிரயம், எடுத்த காரிம் தாமதமாகும். |
| இடபம் | மனோதைரியம், காரிய நன்மை, நற்கீர்த்தி, கூட்டு முயற்சி. |
| மிதுனம் | அதிக செலவு, ரோக நிலை, திடீர் நன்மை, மனோ சங்கடம். |
| கடகம் | வெகுமானம், நல்ல முயற்சி, மாதர் நட்பு, தெய்வ சிந்தை. |
| சிங்கம் | பிறருக்கு உதவுதல், காரிய தாமதம், உஷ்ண நிலை, சுபசெலவு. |
| கன்னி | சயன சுகம், தனதானிய சேர்க்கை, ஆனந்தம், நண்பர்கள் சந்திப்பு. |
| துலாம் | பெரியோரால் மதிக்கப்படுதல், காரிய சித்தி, நன்கொடை, ஆரோக்கியம். |
| விருச்சிகம் | புத்திரரால் கவலை, பணவிரயம், பிரயாணம், நிலை மாற்றம். |
| தனுசு | காரிய தடங்கல், தர்மம், போசன சுகம், அபகீர்த்தி. |
| மகரம் | தனலாபம், உறவினர் சந்திப்பு, பிறருக்கு உதவுதல், நல்ல முயற்சி. |
| கும்பம் | கீர்த்தி, உற்சாகம், போசன சுகம், காரிய அனுகூலம். |
| மீனம் | தாழ்வு நிலை, தனவிரயம், போசன சுகம், முயற்சி தாமதம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 240 |
| உருளைக்கிழங்கு | 120 | 100,120 |
| பச்சைமிளகாய் | 400 | 400 |
| தக்காளி | 280 | 200 |
| அவரை | 60 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 |
| கோவா | 100 | 100 |
| கரட் | 80 | 70 |
| பூசணி | 80 | 60 |
| புடோல் | 80 | 60 |
| வாழைக்காய் | 160 | 150 |
| சின்ன வெங்காயம் | 60 | 60,80 |
| பெரிய வெங்காயம் | 180 | 170 |
| பாகற்காய் | 140 | 70 |
| வெண்டிக்காய் | 80 | 70 |
| கரணைக் கிழங்கு | 40 | 40 |
| பயிற்றங்காய் | 160 | 100 |
| லீக்ஸ் | 200 | 100 |
| போஞ்சி | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 15 |
| தேசிக்காய் | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 |



வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவனம் நடாத்திய பாடசாலை ஆதார முகாமைத்துவ டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி ஆசிரியர் க. உதயரூபன் யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகத்திடம் சான்றிதழ் பெறுவதையும் கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் க. கமலநாதன் மற்றும் வேதநாயகம் ஆகியோரை படத்தில் காணலாம்.

# மெய்வல்லுநர் போட்டி

(அல்வாய்)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் எஸ். சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு கிழக்கு மாகாண சபையின் உதவிக் கணக்காய்வாளர் நாயகம் எஸ். கனகசிங்கம் கலந்து சிறப்பிப்பதுடன் பரிசில்களை திருமதி ரஞ்சினி கனகசிங்கம் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (ஓ-4-19)

☯ ☯ ☯

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க. தர்மகுணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவுப்பகுதி தெற்கு வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், சிறப்பு விருந்தினராக வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு. சரவணபவானந்தன், கௌரவ விருந்தினராக விஞ்ஞான பாட உதவிக் கல்விபணிப்பாளர் திருமதி வாசுகி தவபாலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-2)

☯ ☯ ☯

சுன்னாகம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ஈ.தேவநேசன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். குபேரநாதன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ். பரமநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-6)

☯ ☯ ☯

(சாவகச்சேரி)

மீசாலை விக்னேஸ்வர மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு வித்தியாலய அதிபர் கு. கதிர்காம சேகர் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந் தினராக தென்மராட்சி கல்வி வலய கோட்டக் கல்வி அலுவலர் நா. சத்தியநாதன் , சிறப்பு விருந்தினராக பாடசாலை நலன் விரும்பி க. சோமசுந்தரம் கௌரவ விருந்தினராக பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் இ.தேவசகாயம் பிள்ளை ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-29)

# அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்தும்
# கருத்தரங்கும் கருத்தாடலும்

யாழ். நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்ற மண்டபத்தில் உயர்தர, பட்டப் படிப்பு மா ணவர்களை மையப்ப டுத்தி பெரிய புராணம் காட்டும் வாழ்வியல் என்ற பொருளில் கருத்தரங்கும் கருத்தாடலும் நிகழ்வும் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு செஞ்சொற் செல்வர் ஆறு .திருமுருகன் தலைமையில் இடம் பெறவுள்ளது

இந் நிகழ்வில் "பெரிய புராணம் தோன்றிய காலச் சூழல்" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் து றைத் தலைவர் பேராசிரியர் என். சிவலிங்கராஜாவும்

"பெரிய புராணம் காட்டும் இளமை" என்ற தலைப் பில் கலாநிதி மனோன்மணி சண்முகதாசும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து கருத்தாடல் நிகழ்வும் இடம் பெறும். இதனை யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் ந. செல்வ அம்பிகை, சுன்னாகம் இராமநாதன் கல்லூரி ஆசிரியர் ஆ. கேதீஸ்வரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ம.பா. மகாலிங்கசிவம், கோப்பாய் தெற்கு றோ.க.த.க பாடசாலை அதிபர் ச லலீசன் ஆகியோர் வழிப் படுத்துவர்.

பங்கு பற்றுவோருக்கு இலவசமாகக் கையேடுகள் வழங்கப்படுமெனவும் ஆர்வமுள்ள எவரும் இந் நிகழ்வுகளில் கலந்து கொள்ளலாம் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ)

# தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த முதியவர்களுக்கு பொருட்கள் விநியோகம்

(சாவகச்சேரி)

சாந்திகம் நிறுவனத்தா ல் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 250 முதியவர்களுக்கு உணவுப் பண்டம் அல்லாத பொருட்கள் வழங்கப்படவுள்ளது.

இந் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கொடிகாமம் வடக்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் நடைபெறும்.

14 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட முதியவர்களுக்கே இப் பொருட்கள் வழங்கப்பட வுள்ளன. இவர்களது விபரங்கள் அந்ததந்த பிரிவு கிராம அலுவலர் அலுவலகத்தில் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளதாக தென்மராட்சி பிரதேச செயீலக சமூக சேவைகள் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொடிகாமம் தெற்கு, விடத்தற்பளை,கெற்பெலி, மிருசுவில் வடக்கு, வரணி வடக்கு, மாசேரி, இடைக் குறிச்சி, கரம்பைக் குறிச்சி, வரணி, இயற்றாலை, தாவளை, நாவற்காடு ம ந்துவில் கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கே பொருள் விநியோகம் செய்யப்படவுள்ளது. (ஓ-29)

# எரி காயங்களுடன் வாலிபர் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

வீட்டில் தனிமையிலிருந்த இளைஞர் ஒருவர் தனக்குத் தானே பெற்றோல் ஊற்றி தீமூட்டிக் கொண்ட சம்பவம் நேற்று முன் தினம் மாலை3.30மணிக்கு இடம்பெற்றுள்ளது.

மூளாயைச் சேர்ந்த சின்னத்துரை ராஜகோபால் என்பவரே இவ்வாறு தனக்குத் தானே தீமூட்டிக் கொண்டவராவர். இவர் உடனடியாக அயலவர்களினால் சங்கானை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிக்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

இவரது உடல்முழுவதும் தீக்காயங்கள் காணப்படுவதுடன் இவர் ஒரு மனவளர்ச்சி குன்றியவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# விளையாட்டுக் குழுக் கூட்டம்

உடுவில் கோட்ட மட்ட விளையாட்டுக் குழு கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு உடுவில் கோட்ட அலுவ லகத்தில் கோட்டக் கல்வி அதிகாரி எஸ். குபேரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

உடுவில் கோட்டத்தைச் சேர்ந்த அனைத்து பாடசாலை விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றனர். (ஓ-4)

# கணித பாட மதிப்பீடு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் தரம் 9 தரம் 11 ஆகிய வகுப்பு மா ணவர்களுக்கான கணித பாட மதிப்பீடு நாளை வெள்ளிக் கிழமை சகல பாடசாலைகளிலும் நடைபெறும் என்று வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்தார். (ஓ-29)

# மஹா கும்பாபிஷேகம்

கோண்டாவில் கிழக்கு செல்வநாயகம் வீதி, அருள்மிகு ஸ்ரீ செல்வ பாலநர்த்தன விநாயகர் திருக் கோயில் சம்புரோக்ஷண பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை7 மணி தொடக்கம் 8.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆரம்ப கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகும். நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணி முதல் 4 மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம் பெறும். 8ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 6 .30 மணிக்கு மஹா கணபதி பூஜையுடன் கிரியைகள் ஆரம்பமாகி 7.30 மணிக்கு ஸ்தூபி அபிஷேகமும், காலை 8 மணிக்கு மகா கும்பாபிஷேகம், தசமங்கள தர்சனம், விஷேட பூசை , குருமார் கௌரவிப்பு, ஆசீர்வாதம், ஆசியுரை ஆகியனவும் இடம் பெறும். (ஓ-6)

# இலங்கை வங்கி விரிவாக்கற்கிளை அங்குரார்ப்பண வைபவம்

இலங்கை வங்கியின் வல்வெட்டித்துறை விரிவாக்கற்கிளையின் அங்குரார்ப்பண வைபவம் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வல் வெட்டித்துறை இல65 , யாழ். வீதி விஷ்ணுசுந்தரம் கட்டடத்தில் முன்னாள் பருத்தித்துறைக்கிளை முகாமையாளரும் இலங்கை வங்கி, யாழ் அதிமேற்தரக் கிளை பிர தான முகாமையாளருமான கே.பி. ஆனந்தநடேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வட மாகாண இலங்கை வங்கி உதவி பொது முகாமையாளர் ந. சிவரட்ணம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.


ஆசியுரையினை வல்வை சிவன் கோயில் பிரதம குரு பிரம்ம ஸ்ரீ ப.மனோகரக் குருக்கள், வல்வை முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர், வல்லை நெடியகாட்டுப் பிள்ளையார் கோவில் பிரதம குரு சிவஸ்ரீ சோ. நந்த கோபாலக்குருக்கள், வல்வை புனித செபஸ்தியார் தேவாலய பிரதம குரு அருட் தந்தை ம.ப த்திநாதர் ஆகியோர் வழங்கவுள்ளனர். (ஓ-4)

# மகளிருக்கான பயிற்சித் திட்டங்கள் விரைவில் ஆரம்பம்

(கோண்டாவில்)

ILO நிறுவனத்தின் அனுசரணையுடன் பொருளாதார ஜீவனோபாய மேம்பாடு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச செயலகத்தால் மகளிருக்கான பல பயிற்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கு தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் பொருத்தமான இடம் கிடைத்ததும் விரை வில் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இதன் மூலம் சுய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியும் என எதிர்பார்ப்பதாகவும் நல்லூர் பிரதேச செயலக உதவி திட்டப் பணிப்பாளர் எஸ். ரவீந்திரசர்மா தெரிவித்துள்ளார். (ஓ-36)




# திறப்பு விழா

(அல்வாய்)

நிக்கொட் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட புற்றளை மகாவித்தியாலய உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் கீழான விஞ்ஞான ஆய்வுகூடம், தண்ணீர்த்தாங்கி, செயற்பாட்டறை திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் அனந்தேஸ்வரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வை. செல்வராஜா , சிறப்பு விருந்தினர்க ளாக பாடசாலை வேலைப்பகுதி பொறியிய லாளர் ஜி. சிவபாலன் , நிக் கொட் யாழ். மாவட்ட அபி விருத்தி திட்டப் பணிப்பாளர் ஆர். சிவரூபன் ஆகியோர்கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4-19)

# விசேட தேவையுடையோருக்கான சக்கர நாற்காலிகள் வழங்கல்

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த விசேட தேவையுடையோருக்கான சக்கர நாற்காலி முச்சக்கரவண்டி ஆகியன சமூக சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்படவுள்ளது.

மேற்படி பொருட்கள் தேவைப்படுவோர் (உரிய மருத்துவ சான்றிதளுடன்) பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கும் படி தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.பாவனையில் உள்ள முச்சக்கரவண்டி ,சக்கரநாற்காலிகள் திருத்த வேண்டி இருந்தாலும் விண்ணப்பிக்கும் படி தெரிவித்துள்ளார். (ஓ-29)




பண்டத்தரிப்பு சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலையில் நடைபெற்ற தரம் 1 மாணவர்களின் கால்கோள் விழாவில் புதிதாகச் சேர்ந்த மாணவி மங்கல விளக்கேற்றுவதையும் அதிபர் கெ. அன்ரன் மரியதாஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஓய்வு பெற்ற அதிபர் சு. பிலேந்திரன் சிறப்பு விருந்தினர் இ. இராஜேஸ்வரன் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் த.தர்மகுலசிங்கம் வித்தியாலய ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரை படங்களில் காண லாம்.

# இலங்கையில் தமிழர் 61

## இள மக்களும் தமிழ் மக்களும்

### சிங்கத்தின் வழித்தோன்றல்கள்

தென்னிந்தியா, இலங்கை மற்றும் தென்கிழக்கு ஆசியா ஆகிய இடங்களில் சமஸ்கிருதமயமாக்கம் நடைபெற்றபோது ஆட்சியாளர் பொதுவாகத் தங்கள் குலத் தோற்றத்தை வட இந்திய வம்சங்களுடன் இணைக்கும் புனை கதைகளை உருவாக்கினர்.

இத்தகைய குலத்தோற்றப் புனைகதைகளுள் ஒன்று சிங்கள வம்சத்தின் தோற்றத்தை விளக்கும் சிங்கக் கதை. இவ்வாறே தென்னிந்திய வம்சங்களாகிய சேர, சோழ, பாண்டிய வம்சங்களும் தத்தம் முன்னோர்களை வட இந்தியவம்சத்தவருடன் இணைத்தும் புனை கதைகளை உருவாக்கினர். இந்நிகழ்ச்சிகள் சமஸ்கிருதமயமாக்கத்தின் பல்வேறு கூறுகளுள் அடங்கும். தமிழ் நாட்டில் பாண்டிய வம்சத்தினர், வட இந்திய மரபுக்குரிய சந்திரகுலத்தவராக்கப்படுவதும், மகாபாரதத்துப் பாண்டவர்களுடன் தொடர்புப்படுத்தப்படுவதும் , பாண்டியர் என அவர்கள் குலப் பெயர் சமஸ்கிருத வடிவத்தைப் பெறுவதும், பாண்டிய மன்னர் யாகங்கள் நடத்துவதும்,பாண்டியருடைய வட இந்தியத் தொடர்புகள் பற்றிய புனை கதைகள் தோன்றுவதும் தமிழ் நாட்டு ஆளும் வம்சங்கள் தொடர்பாக நடை பெற்ற சமஸ்கிருத மயமாக்கத்தைக் காட்டுகின்றன. பாண்டியரைப் போலவே, சேரரும் மகாபாராத வீரர்களுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளனர். சோழவம்சத்தவர் சூரிய குலத்தவராக்கப்பட்டுப் பல புனைகதைகள் அவர்கள் முன்னோர்கள் பற்றி இயற்றப்பட்டன. இதே போலவே, இலங்கையிலும் அநுராதபுரத்திலும் ஆதிக்கம் பெற்றிருந்த ஆட்சியாளர் வங்க தேசத்து அரச குலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் சிங்கத்தின் வழித் தோன்றல்கள் என்றும் சூரிய குலத்து இக்ஷ்வாகு பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்றும் புனை கதைகள் உருவாக்கப்பட்டன. சிங்கத்தின் வழித் தோன்றல்கள் என்ற கதை உருவாக்குவதற்கு ஸிள என்ற இனக்குழுப் பெயர் காரணமாய் இருந்திருக்கலாம் என்று கொள்ள இடமுண்டு.

எளு, ஹெள என்ற பெயர்களால் வழங்கும் மொழி இலங்கையில் உருவாகிய சிங்கள மொழி. இம் மொழியில் ஸி எனவும் ஸீ எனவும் வழங்கிய சொற்கள் சிங்கம் என்ற பொருளைக் கொண்டவை.

இவை ஸிங்ஹ என்ற சமஸ்கிருதச் சொல்லின் வழியாகப் பெறப் பட்ட பிராகிருத பாளிச் சொல்லாகிய ஸீஹ என்ற சொல்லை மூலமாகக் கொண்ட எளு மொழிச் சொற்கள் என்று ஏற்கப்பட்டுள்ளன. ஆதி இரும்புக் காலத்தில் ஸிள/ ஸீள என வழங்கிய இனக்குழுப் பெயரை சமஸ்கிருத மயமாக்கிய போது, இலகுவில் அதனை ஸீஹள/ ஸிங்ஹள என மாற்றி, ஸிங்ஹ என்பதை விளக்குவதற்கு ஒரு புனை கதை பின்னர் உருவாக்கப்பட்டிருக்கலாம். இப்படியாகப் பெயர்கள் மாற்றப்படுவது சமஸ்கிருதமயமாக்கம் நடைபெற்ற இடங்களில் பரவலாகக் காணப்பட்டது. இதற்கு ஒரு நல்ல எடுத் துக்காட்டு அதியமான் என்ற தமிழ் நாட்டுக் குலப் பெயர் ஸதியபுதோ என பிராகிருத மொழி வடிவைப் பெற்றமையாகும்.

இது வரை ஆராயப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டு அளவில் இலங்கையில் காணப்பட்ட நிலைமை பற்றிப் பின்வரும் முடிவுக்கு வர இடமுண்டு. பௌத்த சங்கம் ஒன்று அரச ஆதரவுடன்அநுராதபுரத்தில் நிறுவப்பட்ட போது அநுராதபுர மன்னர் ஆண்ட அரசில் ஓர் இனக்குழு அரசியலிலும் எண்ணிக் கையிலும் ஆதிக்கத்துடன் விளங்கியது. அக்குழு பிற்பட்ட காலத்தில் ஹெள என்ற பெயரைக் கொண்டுள்ளது. ஆனால் ஆதி இரும்புக் காலத்தில் இக்குழு இள(தமிழில்இள/இழ/ஈழ) என்ற பெயரைப் பெற்றிருந்தது. இக்குழு தொடர்ந்து ஆதிக்கத்துடன் விளங்கியதால், பிற சிறு இனக்குழுக்கள் காலப் போக்கில் இப் பெரிய இனக் குழுவுடன் கலந்து விட்டன. இக் குழுவின் உயர் குழாத்தினர் பௌத்தத்தைத் தழுவியதன் விளைவாய்க் காலப் போக்கில் இக் குழுவைச்சேர்ந்த பிறரும் பௌத்தத் தை ஏற்றுக் கொண்டனர். பிராகிருத மொழியும் இக் குழுவினர் மொழியாகியது. இவ் வளர்ச்சிகளால் ஒரு வலுப் பெற்ற, தனித்துவமான மொழி, மத, மற்றும் பண்பாட்டு அடையாளத்தைப் பெற்ற ஓர் இனக்குழுவாக ஹெள/ஸிங்ஹள என்ற பெயருடன் இள என்ற குழு பரிணாம வளர்ச்சி பெற்றது.

### அநுராதபுரத்திலுள்ள தொல்லியல் சான்று

கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் அநுராதபுரத்தில் நடத்தப்பட்ட அகழ்வாய்வுகளின் விளைவாக பொ.ஆ.மு ஒன்பதாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் குடியிருப்புத் தொடங்கியிருந்ததை அறியலாம். இக் குடியிருப்பின் பண்பாட்டுக் கூறுகளைப் பார்க்குமிடத்துத் தென்னிந்தியத் தீப கற்பத்தின் இரும்புக் காலப் பண்பாட்டைச் சேர்ந்த கூறுகளே இவை என அகழ்வாய்வு நடத்திய தொல்லியலாளர் எடுத்துக் கூறியுள்ளனர். வட இந்தியப் பண்பாட்டுச் செல்வாக்கும் பிராகிருத மொழியின் வருகையும் பொ. ஆ.மு ஐந்தாம் நூற்றாண்டிலிருந்தே காணக் கூடியதாய் உள்ளன.

அநுராதபுரத்தின் தொல் குடிகள் யார் என்பதை உறுதியுடன் கூற முடியாது. அங்கு முதலில் நாம் காணும் குடியிருப்பைச் சேர்ந்தோர் பெரும்பாலும் இடைக் கற்காலத்து மக்களின் வழித் தோன்றல்கள் என்றே கூறலாம். அக்குடியிருப்பின் உயர் குழாத்தில் தென்னிந்தியப் பெருங்கற்பண்பாட்டை அறிமுகப்படுத்தியோர் அடங்கியிருப்பர். பொருளியல் காரணங்கள் இவர்களை இங்கு வந்து குடியிருக்க உதவியிருக்கலாம். இந்த ஆதிக் குடியிருப்பில் பொ.ஆ.மு ஐந்தாம் நூற்றாண்டளவில் வட இந்தியாவிலிருந்தும் கிழக்கு இந்தியாவிலிருந்தும் புதிய பண்பாட்டுச் செல்வாக்கு பரவியது.

### பிராகிருதத்தின் வருகை

வட இந்தியச் செல்வாக்கு ஏற்படுத்திய நீண்ட கால விளைவுகளுள் முக்கியமான ஒன்று மொழி தொடர்பானது. இந்தச் செல்வாக்கு வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு தன்மையுள்ள விளைவுகளை ஏற்படுத்தியது. பிராகிருத மொழி வடக்கிலிருந்து தெற்கு நோக்கிப் பரவிய போது சில இடங்களில் பழைய மொழிகளை அகற்றியது., வேறு இடங்களில் அவ்வாறு வெற்றிகரமாக வேரூன்ற முடியவில்லை. பழைய மொழி ஒன்று வளர்ச்சியடைந்து பிராகிருதத்தின் தாக்கத்தை எதிர்நிற்கக்கூடிய நிலையில் இருந்தால், அம் மொழியைப் பிராகிருதம் அழிக்கத் தவறியது எனத் தோன்றுகிறது. (தொடரும்)


பேராசிரியர்
**கா. இந்திரபாலா**





அச்சுவேலி தோப்பு அருள்நந்தி வித்தியாலயத்தின் தரம் 1 மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவில் அதிபர் மு.இராஜவரோதயம் மங்கல விளகேற்றுவதையும், தரம் 1, தரம்2 மாணவர்கள் , ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களையும் படங்களில் காணலாம்.

# ஆரம்பக் கல்வி ஆசிரியரின் கடமைகள் 4



கணித பாட விதானத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களுக் கேற்ப ஆசிரியர் பயிற்சியிலும் சமாந்தர மாற்றங்கள் தேவைப்பட்டன. கணிதம் கற்பித்தலுக் கும் பாரம்பரிய எண் கணிதம்போலல்லாது ஆழ்ந்த விளக்கம் தேவைப்பட்டது.

புதிய எண்ணக்கருக்கள் எண் கணிதத்திற்கு இருந்ததை விட வித்தியாசமான கற்பித்தல் திறன்களைக் கோரியது.

எண்கணித எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வதற்கு பெருந்தொகையான கற்பித்தல் உதவிச் சாதனங்கள் தேவைப்பட்டிருக்கவில்லை. ஆனால் புதிய கணிதத்திற்கு எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வதற்கு கற்பித்தல் உதவிச் சாதனங்கள் இன்றியமையாததாகும். எனவே தான் ஒவ்வொரு ஆசிரியருக்கும் கற்பித்தல் உதவிச் சாதனங்களை தயாரிக்கும் தொழில் நுட்பங்களையும் அவற்றைப் பயன்படுத்தும் முறையையும் வழங்குவதற்காக துரிதப்படுத்தப்பட்ட வார இறுதி சேவைக்கால ஆசிரியர் பயிற்சி நெறியொன்றுஉடனடியாக அறிமுகப் படுத் தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் புதிய ஆசிரியர் பயிற்சி நெறி பாட விதான மொன்றும் அறிமுகப் படுத்தப்பட்டது.

மேலும் இலங்கையில் ஆரம்பக் கல்வி வட்டத்தில் கணிதத்திலும், மொழியிலும் விளக்கத்தினதும் அடைவினதும் மட்டங்கள் பற்றிய முறையான எந்தவொரு ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. முறையான கண்காணிப்பு வேலைத்திட்டமும் விருத்தி செய்யப்படவில்லை.

இதன் பேறாக வசதி குறைந்த பகுதிகளில் கணிதம் தொடர்பான தகுதி மட்டம் குறைவாக இருந்தது மட்டுமல்லாமல் பெரும் தொகையான பிள்ளைகள் கணிதத்துடனும் மொழியுடனும் தொடர்புபட்ட அடிப்படைத் தேர்ச்சிகளைப் பெறாமலே பாடசாலையை இடையில் விட்டுச் சென்றனர்.

உண்மையில் இது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் காணப்படும் பொதுவான ஒரு காட்சியாகும். யுனெஸ்கோ, கிராமிய ஆரம்பக்கல்வியில் அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்கான கற்கையையும் செயல் வேலைத் திட்டத்தையும் ஆரம்பித்தது.

இதன்படி இலங்கையில் முதன் முறையாக இந்த வேலைத்திட்டத்தைப் பயன்படுத்தி ஆண்டு 1 இலிருந்து ஆண்டு 5 வரை மொழியிலும் கணிதத்திலும் அடைவு மட்டத்தை தீர்மானிப்பதற்கு ஆய்வொன்றை 1986 இல் நடத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாய்வின் அடிப்படையில் குறை வடைவுக்குரிய காரணிகள் பல கண்டறியப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கான ஆலோசனைகளும் பரிகாரங்களும் முன்மொழியப்பட்டன.

இதனைத் தொடர்ந்து வந்த சீர்திருத்தங்களில் பரிகார முறைகள் இனங்காணப்பட்டாலும் அவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்தி வெற்றி காண முடியாத நிலை தொடர்ந்து கொண்டே செல்வதும் அவற்றுக்கான தடைகளை முற்று முழுதாக இல்லா விட்டாலும் கணிசமானவளவு நீக்குவதற் குரிய எல் லா முயற்சிகளும் அர்ப்பணிப்புடன் எடுக்கப்படவில்லை எனலாம். இதனால் அடிப்படைத் திறன்களின் தாழ் அடைவைக் குறைத்து அடைவை உயர்த்த இன்று வரை முடியாததொன்றாக முக்கியமாக குறைவளம் கொண்ட கிராமிய ஆரம்பப் பாடசாலைகளில் காணப்படுகின்றது.

இது தவிர தற்பொழுது வளம் கூடிய பாடசாலைகளில் வசதி படைத்தோரின் பிள்ளைகளின் தரம் 1 பிரவேசம் கூட இந்நாட்டில் சிக்கலுக்குரியதாக அமைந்தது மாத்திரமன்றி அது சார்பான பரிந்துரைகளுக்காக உச்ச நீதிமன்றம் வரை இப்பிரச்சனை கொண்டு செல் லப்பட்டமையும் கூட சீரான ஓர் ஒழுங்குமுறை நிலையாக கடைப்பிடிக்காமையும் மாத்திர மன்றி கல்வி சார்ந்த பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டு செல்வதைக் காட்டுவதுடன் தரம் 6 பிரவேசமும் இதே போக்கையே காட்டுகிறது.

இதற்குரிய காரணிகளில் ஒன்று தேசிய பாடசாலைகளின் உருவாக்கமும் அதன் தனித்துவமும் இந்நிலையை மேலும் வலு வாக்கியுள்ளது எனவும் கருதப்படுகிறது.

ஆனால் வளம் குறைந்தோரின் பிள்ளைகளைப் பொறுத் தவரையில் பிரச்சனைகள் வேறாகும்.

எனவே ஆரம்பக்கல்வியாசிரியர்கள் பிள்ளைகளுக்கு கற்றல் – கற்பித்தல் செயற்பாட்டை ஒரு சவாலாக இதய பூர்வமாக ஏற்றுக் கொண்டு இயன்றவரை பிள்ளைகள் முகங்கொடுக்கும் தடைகளுக்கெதிராகச் செயற்பட்டு அர்ப்பணிப்புடன் கடமையை நிறைவேற்றுவதின் மூலம் அவர்கள் பாடசாலையில் இருந்து இடையில் விட்டுச் செல்லாது தெவழிசமைத்துக் கொடுத்தல் புனிதமான அர்த்தமுள்ள பணியாகும். (முற்றும்)

**த.காங்கேசபிள்ளை**
ஓய்வுபெற்ற அதிபர் ,பலாலி ஆசிரியர் கல்லூரி

# கொலை கலாசாரத்தை பார்த்துக் கொண்டிராது சிவில் சமூகங்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்

## மாற்றுக் கொள்கை நிலையத்தின் பணிப்பாளர் நிமல்கா பெர்னாண்டோ

(கொழும்பு)

1989 களில் இந்நாட்டில் மனித உரிமைகள் மீறப்பட்டு வன்முறைகள் உச்ச அளவில் கட்டவிழ்த்து விடப்பட்ட சந்தர்ப்பத்தில் அன்று எதிர்க்கட்சித் தரப்பிலிருந்த மஹிந்த ராஜபக்ஷ இப்போது நாட்டின் அதிபரென்ற அதிகாரத்தை கைப்பற்றியதிலிருந்து முன்னரை விட மோசமான அளவுக்கு அரச தரப்பால் கொலைக்கலாசாரம் கட்ட வீழ்த்து விடப்பட்டுள்ளது. இதனை பொது அமைப்புக்கள் பார்த்துக் கொண்டிருக்காது இதற்கெதிராக குரல் கொடுக்க முன்வரவேண்டும்.

இவ்வாறு மாற்றுக்கொள்கை நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் நிமல்கா பெர்னாண்டோ தெரிவித்தார்.

சுதந்திரத்திற்கான அரங்கம் எனும் பொது அமைப்பின் செய்தியாளர் சந்திப்பு திங்கட்கிழமை பிற்பகல்கொழும்பு தேசிய நூலக ஆவணப்படுத்தல் சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

1970, 71மற்றும் 83, 89 ஆகிய ஆண்டுகளில் எமது நாட்டில் ஏற்பட்ட கிளர்ச்சிகள் மற்றும் வன்முறை சம்பவங்களின் போது நீதிக்காக குரல் கொடுத்த சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள் சமாதான விரும்பிகள் போன்றோர் தாக்கப்பட்டதுடன் படுகொலையும் செய்யப்பட்டனர்.

இந்நிலையில் அன்றைய காலப்பகுதியுடன் முற்றுப்பெறாமல் இன்று வரை தொடர்ந்த வண்ணமே உள்ளது.

நாட்டில் இடம் பெறும் அராஜகம் அநீதி போன்ற விடயங்களை எழுதும் ஊடகவியலாளர்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரால் அச்சுறுத்தப்படுகின்றனர்.

எழுதும் உரிமைக்கு விடுக்கப்பட்ட மற்றுமொரு அண்மைய உதாரணமே லசந்தவிக்கிரமதுங்கவின் படுகொலைச் சம்பவம். இது போன்ற அரசாங்கத்தின் அடக்கு முறைக்கு எதிராக நாம் சிவில் சமூகமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

கடந்த காலங்க ளில் அவ்வாறே நாம் ஒன்றிணைந்தே செயற்பட்டுள்ளோம். மனித உரிமைகள் மீறப்படுவதற்கு எதிராகவே தொழிற் சங்கங்கள், மகளிர் அமைப்புகள், சிவில் அமைப்புகள் பாடுபடுகின்றன.

வாழும் உரிமை மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரம் மக்களுக்கும் ஊடகவியலாளர் களுக்கும்இல்லாவிட்டால் நாடு என்ற ஒன்று அவசியமில்லை என்றார்.

இச்சந்திப்பின்போது,

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து உரைநிகழ்த்தும் போது மனித உரிமைகளை அனுபவிப்பதற்கும் வாழும் உரிமையை தக்கவைத்துக் கொள்வதற்கும் எமது மக்களுக்கு பன்னெடுங் காலமாக தடைகளும் இடையூறுகளும் விளைவிக்கப்பட்டுவருகின்றன.

நாட்டின் ஜனநாயக உரிமைகளை அனுபவிக்கும் உரிமை இநாட்டின் அத்தனை குடிமக்களுக்கும் உண்டு. அதனை எந்தவொரு தரப்பாலும் தட்டிப் பறிக்க முடியாது.

ஆனால், இலங்கையில் இடம் பெறுவது அதுவே.

ஆகவே ஜனநாயக நாடாக இந் நாட்டை நாம் மாற்றியமைக்க வேண்டுமானால் வெவ்வேறு துருவங்களாக நாம் நில்லாது ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

வாழும் சுதந்திரம், கருத்து வெளியிடும் சுதந்திரம் ஆகிய இவற்றிற்கு இடையூறு விளைவிக்கப்படும் சந்தர்ப்பத்தில் நாம் ஓரணியில் திரண்டு குரல் கொடுக்க வேண்டும் என்றார். (ஓ-6)

## இலங்கை தூதுவராலயங்களுக்கு மேலதிக பாதுகாப்பு

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவராலயங்களுக்கு மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த தூதுவராலயங்கள் தாக்கப்படக் கூடும் என்ற அச்சம் காரணமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஜெர்மனி மற்றும் கனேடிய இலங்கைத் தூதுவராலயங்கள் மீது அண்மையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மேலும் பல நாடுகளினது தூதுவராலயங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படக் கூடும் என்ற அச்சத்தால் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)

# வன்னியில் வைத்தியசாலைகளை பாதுகாப்பு வலயத்துக்கு மாற்ற பணிப்புரை

## சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

பொதுமக்களுக்கு ஏற்படும் உயிரிழப்புக்களைத் தவிர்க்கும் நோக்கில் புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம், உடையார்கட்டு மற்றும் சுதந்திரபுரம் வைத்தியசாலைகளின் செயற்பாடுகளை பாதுகாப்பு வலயத்துக்கு மாற்றுமாறு கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்களுக்கு பணிப்புரை விடுத்திருப்பதாக சுகாதார அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

வன்னியில் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் அதிகரித்திருப்பதைத் தொடர்ந்தே இவ்வாறான அறிவித்தலை விடுத்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வரதராஜா மற்றும் கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் சத்திய மூர்த்தி ஆகியோர் கடந்த வாரம் தன்னைத் தொடர்பு கொண்டு, வன்னிப் பகுதியில் வைத்தியசாலை நடவடிக்கைகளைக் கொண்டு நடத்துவது தொடர்பாக ஆலோசித்ததாக சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மோதல்கள் நடைபெறும் பகுதியிலிருந்து வெளியேறி பாதுகாப்பு வலயத்துக்குச் செல்லுமாறு தான் அவர்களுக்கு ஆலோசனை வழங்கியதாக சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் கஹட்டலியனகே, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# மும்பைத்தாக்குதல் தொடர்பாக 120 பேர் மீது வழக்கு தொடர பாக் முடிவு

(இஸ்லாமாபாத்)

மும்பை பயங்கரவாதத் தாக்குல் சம்பவத்தில் தொடர்பு இருப்பதாகக் கூறி 120 பேர் மீது வழக்குத் தொடர பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.

ஆனால் இந்த 120 பேரில் இந்தியா சுட்டிக் காட்டி உள்ள முக்கிய தீவிரவாதிகள் யாரும் இல்லை என்று தெரிகிறது.

பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ-ஆல் உருவாக்கப்பட்டு, வளர்த்து விடப்பட்ட லஷ்கர் இ தொய்பா அமைப்பினர் மீது பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுக்க முடிவு செய்திருப்பது இதுவே முதல் முறை.

மும்மைத் தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளுடன் பாகிஸ்தானில் இருந்து செல்போன், இமெயில் மூலம் தொடர்பு கொண்டு பேசியவர்கள் மீது சைபர் குற்றப் பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்ய அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது

மும்பைத் தாக்குதல் சம்பவத்தில் பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகளுக்குத் தொடர்பு உள்ளது என்று இந்தியா குற்றம் சாட்டியது.

அதற்கான ஆதாரங்களை பாகிஸ்தான் வசம் ஒப்படைத்து பயங்கரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமெரிக்காவும் பாகிஸ்தான் அரசுக்கு நெருக்கடி கொடுத்து வருகிறது. ஆதாரங்கள் எதையும் இந்தியா கொடுக்கவில்லை.

வெறும் தகவல்களை தான் கொடுத்தது என்று முதலில் பிடிவாதம் செய்த பாகிஸ்தான், வேறு வழியில்லாமல் மும்பைத் தாக்குதலில் பாகிஸ்தானில் உள்ளவர்களுக்கு உள்ள தொடர்பு குறித்து விசாரிக்க ஒப்புக்கொண்டது.

இந்த விசாரணையின் அடிப்படையில் தற்போது 120 பேர் மீது வழக்குத் தொடர முடிவு செய்யப்பட்டுள்ளது இதில் பெரும் பாலானோர் லஷ்கர் இ தொய்பா மற்றும் ஜமாத் யுத் தவா அமைப்பைச் சேர்ந்தவர்கள். (ஓ-6)

## உலக தரிசனம்

# பாகிஸ்தானில் முக்கிய பிரமுகர்களுக்காக ரூ. 600 கோடியில் ஹெலிகொப்டர்

(இஸ்லாமாபாத்)

முக்கிய பிரமுகர்களுக்காக பாகிஸ்தான் அரசு, 600 கோடி ரூபாய் செலவில் ஹெலிகொப்டர்கள் வாங்க முடிவு செய்துள்ளது.

அங்குள்ள பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பாகிஸ்தான் பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தியில் பாகிஸ்தானில் ஏராளமான மக்கள் தங்கள் அன்றாட தேவைகளை கூட நிறைவேற்ற வழியில்லாமல் வறுமையில் அவதிப்படுகின்றனர்.

இந்நிலையில் முக்கிய பிரமுகர்கள் பாதுகாப்பாக பயணம் செய்வதற்காக 600 கோடி ரூபாய் செலவில் ஐந்து ஹெலிகொப்டர்களை வாங்க அரசு திட்டமிட்டுள்ளது.

இவற்றில் இரண்டு ஹெலிகொப்டர்கள் வி.ஐ.பி.க்களுக்கும் மூன்று ஹெலிகொப்டர்கள் அவசர கால பயன்பாட்டுக்கும் பயன்படுத்தப்படவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர வடமேற்கு மாகாண கவர்னர் பயணம் செய்வதற்காகவும் அம்மாகாண நிர்வாகம் சார்பில் ஒரு ஹெலிகொப்டர் வாங்கப்படவுள்ளது.


சாதாரண மக்கள் அவதிப்படும் சூழ்நிலையில் மக்களின் வரிப் பணத்தை முக்கிய பிரமுகர்களுக்காக செலவழிப்பது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. இது குறித்து பாக் அமைச்சரவை முன்னாள் செயலர் கியாசுதீன் கூறுகையில்,

ஹெலிகொப்டர்கள் வாங்குவதற்கான கட்டளை கிலானி பிரதமராக பதவியேற்பதற்கு முன் கொடுக்கப்பட்டது. என்றார்.(ஓ -6)

# பாக் - ஆப்கான் நெடுஞ்சாலையிலுள்ள முக்கிய பாலம் தலிபான்களால் தகர்ப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் நெடுஞ்சாலையில் முக்கியமான பாலம் ஒன்றை



தலிபான் பயங்கரவாதிகள் தகர்த்தனர். இதனால், ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோ மற்றும் அமெரிக்கப் படையினருக்கு பாகிஸ்தானிலிருந்து பொருட்கள் செல்வது தடைப்பட்டுள்ளது.

இந்த நெடுஞ்சாலையானது பாகிஸ்தான் வடமேற்கு எல்லை மாகாணத்தில் பெஷாவர் அருகேயுள்ள கைபர் பழங்குடியின பகுதியில் ஜம்ரூத் துணை மாவட்டத்தில் உள்ளது. பாலம் தகர்க்கப்பட்டதால், ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க மற்றும் நேட்டோ படைகளுக்கு பொருட்களை கொண்டு சென்ற லொறிகள் உட்பட ஏராளமான வாகனங்கள் நடுவழியில் நிற்கின்றன. பாலத்தை தகர்த்த பயங்கரவாதிகளை வேட்டையாட, ஏராளமான பாதுகாப்புப் படையினர் இப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் பாலத்தை சீரமைக்கவும், மாற்று வழியில் போக்குவரத்தை திருப்பி விடவும் அரசு நிர்வாகத்தினர் முற்பட்டுள்ளனர்.

அமெரிக்கப் படையினருக்கு பொருட்களை எடுத்துச் செல்லும் லொறிகளை தாக்குவதை தலிபான்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். அதைத் தடுக்கும் வகையில் லொறிகள் செல்லும் போது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதால், பாலத்தை தகர்த்து பொருட்கள் செல்வதை தடை செய்துள்ளனர். (ஓ-6)

# ஜேர்மனியில் உள்ள இலங்கை தூதரகம் மீது தாக்குதல்

ஜேர்மனியின் பேர்லின் நகரில் அமைந்துள்ள இலங்கை தூதரகம் மீது கடந்த திங்கட்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என சந்தேகிப்பதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹண தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைய ஜேர்மன் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தகவல் தருகையில்,

ஜேர்மன் பேர்லின் நகரில் அமைந்துள்ள இலங்கை தூதரகம் மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதலானது சர்வதேச சட்ட திட்டங்களை மீறும் செயலாகும்.

ஒரு நாட்டில் அமைந்துள்ள இராஜதந்திர உறவுகளை கையாளும் தூதரக அலுவலகம் மீது தாக்குதல் நடத்துவதானது பயங்கரவாதக் குற்றமாகும்.

விடுதலை புலிகளின் ஆதரவாளர்கள் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என நாம் சந்தேகிக்கின்றோம்.

இந்நிலையில் ஜேர்மன் அரசாங்கம் இந்த சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கின்றோம். ஜேர்மனுடன் இலங்கை அரசாங்கம் சிறந்த உறவுகளை பேணி வருகின்றது.

இது தொடர்பில் நாங்கள் ஜேர்மன் அரசாங்கத்திடம் எந்த கோரிக்கையையும் விடுக்கப் போவதில்லை.

சம்பவம் தொடர்பில் ஜேர்மன் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டியது அதன் பொறுப்பாகும். (ஓ-6)

# நாட்டை விட்டுச் சென்ற இலங்கையர்கள் அனைவரும் தாய் நாட்டுக்கு திரும்ப வேண்டும்

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

சங்கைக்குரிய மகா சங்கத்தினரே,

அனைத்து சமயத் தலைவர்களே, கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் கௌரவ சபாநாயகர் அவர்களே, அமைச்சர்களே, பாராளுமன்ற உறுப்பினர்களே, ஆளுநர்களே, உயர் நீதியரசர் உட்பட நீதியரசர்களே, வெளிநாட்டுத் தூதுவர்களே, ஜனாதிபதியின் செயலாளர் உட்பட அனைத்து அரச உத்தியோகத்தர்களே, முப்படைத் தளபதிகளே, பொலிஸ்மா அதிபர் அவர்களே, பெற்றோர்களே, அன்பார்ந்த பிள்ளைகளே,

இலங்கையர்களாகிய நாம் எல்லோரும் மனதால் பிரார்த்தித்த ஒன்றுபட்ட தாய் நாட்டிலிருந்து இன்று நாம் தேசியக் கொடியை ஏற்றி வைத்தோம் என்பதை மிகப் பெருமையுடன் தேச மக்களுக்கு கூற விரும்புகின்றேன். தாய்நாட்டின் சுதந்திரத்திற்காகவும், சுயாதீனத்திற்காகவும் உயிர்த்தியாகம் செய்ய முன் வந்த, அத்துடன் அப்போராட்டத்திற்கு மனதார ஆசீர்வாதம் வழங்கிய எமது அன்பார்ந்த நாட்டு மக்களே, தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை பெரும் அன்புடன் அவதானிக்கின்ற தேசத்தின் எதிர்காலத்திற்குச் சொந்தக்காரர்களான அன்புள்ள மகனே, மகளே,

இற்றைக்கு 61 ஆண்டுகளுக்கு முன்னர் எமது பெருமைமிக்க தாய் நாடு பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளின் பிடிக்குள் இருந்து சுதந்திரம் பெற்றது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய பல்வேறு ஐரோப்பிய இனத்தவர்களுக்கு முழுமையாகவோ அல்லது பாதியாகவோ ஆதிக்கத்துக்கு உட்பட்டு 500 ஆண்டுகளுக்குப் பின்னர் 1948 பெப்ரவரி 04 ஆம் திகதி பிரித்தானியர்களால் எமக்கு தேசிய சுதந்திரம் வழங்கப்பட்டது.

அந்த நேரமாகும் பொழுதுகூட, 1818 இலும், 1848 இலும் எமது மக்களால் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்கு எதிராகப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. வீர மொனராவில கெப்பிட்டிப்பொல, வீர புரன் அப்பு ஆகிய வீரர்கள் அப்போராட்டங்களில் தமது உயிர்களைத் தியாகம் செய்தனர். எமது சுதந்திரத்தைப் பற்றிச் சிந்திக்கின்ற ஒவ்வொரு கணத்திலும் எமது நினைவுக்கு வருவது வேறு யாரும் அல்ல, அந்த தியாக வீரர்களே.

ஆயினும், தொடர்ந்து ஏற்பட்ட பல்வேறு வெளி நாட்டு ஆக்கிரமிப்புகளுக்கு எமது தாய்நாடு ஆளாகியதினால், எமது தேசத்திற்கே உரிய எதிர்காலப் பயணம் பல சவால்களை எதிர்நோக்கியது. எமது அறிவு, தொழில் நுட்பம், பல்வேறு கலைகள் ஆகியவற்றின் தொடர்ச்சியான அபிவிருத்தியில் இடை நடுவில் நின்று விட்டன. 1948 பெப்ரவரி 04 ஆம் திகதி பிரித்தானியர்கள் எமக்கு சுதந்திரம் வழங்கியதையடுத்து எங்களுக்குரிய எதிர்காலத்தில் முன்னேற்றத்தை நோக்கிய பயணத்தில் ஈடுபட எமக்கு சந்தர்ப்பம் உருவாகியது.

ஆயினும், பேதங்களை ஏற்படுத்தி எமக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த சமூகத்தை ஒரே குடையின் கீழ் ஒன்று படுத்திச் சரியான வழியில் வழிநடாத்திச் செல்ல எம்மால் சரியாக இயலவில்லை. அதனால், சுதந்திரம் பெற்று 30 வருடங்கள் பூர்த்தியடையும் போது எமது தேசத்தைப் பிரித்துக் கூறுபடுத்துவதற்கு முயற்சி எடுக்கின்ற பிரிவினைவாத, இன வாத, பயங்கரவாத அரசியலொன்றின் பிறப்பு எம் முன் சம்பவித்தது.

நண்பர்களே,

உலகத்தின் பலம்வாய்ந்த பயங்கரவாதிகள் தமது குறிக்கோளான, அதாவது இந்த நாட்டைப்பிரித்துத்தமிழீழமொன்றை உருவாக்குவதற்கான நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான சந்தர்ப்பம் அண்மித்துக்கொண்டிருந்தது. தாய்நாட்டை இரு கூறுகளாகப் பிளவுபடுத்துவதற்கான ஏற்படுகின்ற பயங்கரவாதத்தின் வெற்றியை சொல்லப்பட்ட சமாதானமாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்றிருந்த ஆட்சியாளர்கள் எம்மை வற்புறுத்தினார்கள். நிலத்தின் அதிகாரம், கடலின் அதிகாரம், வான்பரப்பின் அதிகாரம் மாத்திரமல்ல, பயங்கரவாத இயக்கமொன்றின் முன்னே அடிபணிதல், சமாதானத்தை வெற்றி கொள்வதற்கான வழிமுறையாக ஏற்றுக்கொள்ளுமாறு பல்வேறு வெளிநாட்டுச் சக்திகள் கூட எமக்குப் புரியவைப்பதற்கு முயன்றன.

அத்துடன், சில சர்வதேச நிறுவனங்கள் எமது நாடு பலவீனமானதொரு நாடாக ஆளாகியுள்ளதென எடுத்துக்காட்ட முயற்சி செய்தமையினால் இலங்கையில் பிறந்த நாம் அனைவரும், எமது தாய்நாட்டுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள துர்ப்பாக்கிய நிலை குறித்து பெரும் வேதனைக்கு ஆளாக்கப்பட்டனர். அவர்கள் மனதால் அழுதார்கள்.

நண்பர்களே,

எமது மகத்துவம் மிக்க தாய்நாட்டின் தாங்கிக் கொள்ள முடியாத அந்த துரதிஷ்டவசமான நிலைக்கு இறுதியில் நாம் சவால் விடுத்தோம்.

அன்று 2005 இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் என்னை இந்த நாட்டின் தலைமைத்துவத்திற்குக் கொண்டு வந்தது, அந்தத் துரதிஷ்டவசமான நிலையுடன் போராடுவதற்கே - அந்தத் துரதிஷ்டமான நிலையைத் தோல்வியுறச் செய்து தேசத்திற்கு வெற்றியைப் பெற்றுத் தருவதற்கே பிரிவினைவாத பயங்கரவாதத்தின் வெற்றியினால் ஏற்படுகின்ற கெளரவமற்ற சமாதானத்திற்குப் பதிலாக பிரிவினைவாத பயங்கரவாதத்தின் தோல்வியினால் ஏற்படுகின்ற கௌரவமான சமாதானத்தை இந்த நாட்டில் ஏற்படுத்துவதற்கே ஆகும்.

காலத்திற்குக் முன்கொண்டுவரப்பட்ட இந்தச் சவாலை வெற்றிகொள்ள வேண்டிய பொறுப்பு, 2005 ஜனாதிபதி தேர்தலின் போது நீங்கள் என் மீதும் எமது அரசின் மீதும் ஒப்படைத்தீர்கள். கஷ்டமானதும் ஆபத்தானதுமான சவாலை எதிர்கொள்ள எப்படியாவது அதனை வெற்றிகொள்வோம் என்ற உறுதியுடன் நாம் அதனை எதிர்கொண்டோம்.

தோல்வி என்பது வெற்றியின் தாய் என்று சொல்லப்படுகின்றது. கடந்த காலங்களில் இருந்த பல அரசாங்கங்களினாலும், பல தலைவர்களினாலும் பிரிவினைவாத பயங்கரவாதத்துடனான இப்பிரச்சினையை யுத்தத்தின் மூலமும் பேச்சுவார்த்தைகளின் மூலமும் தீர்த்துக் கொள்வதற்குபல்வேறுமுயற்சிகள்மேற்கொள்ளப்பட்டன என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த எல்லா முயற்சிகளும் தோல்வியில் முடிவடைந்தன என்பது ஒரு இரகசியமல்ல. அந்தத் தோல்வியினூடாக வெற்றியை நோக்கிச் செல்ல வேண்டுமென நான் தீர்மானித்தேன். அன்று, 2005 ஜனாதிபதித் தேர்தலில் 'மஹிந்த சிந்தனை' கொள்கைப் பிரகடனத்தில் நான் இவ்வாறு குறிப் பிட்டிருந்தேன்.

"கடந்த காலத்தில் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட எல்லா நடவடிக்கைகளிலும் இருந்த நன்மை தீமைகளை முறையாக விசாரித்தறிந்து புதிய வழியொன்றை மேற்கொள்ள நான் உத்தேசிக்கின்றேன். அதற்கான வழிமுறைகளை

## 61ஆவது சுதந்திர தின வைபவத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரை

ஏற்படுத்தும் பொழுது உரிய அடித்தளமாக பிளவு படாத நாடு பெரும்பான்மை கருத்தொருமைப் பாடு, கௌரவமான சமாதானம் அமையும்"

எவ்வாறாயினும் முழுத்தேசத்தையும் பல தசாப்தங்களாக பீதிக்கு ஆளாக்கிய பயங்கரவாதத்தை குறுகிய காலப்பகுதியான இரண்டரை ஆண்டுகளில் முழுமையாக தோல்வியடையச் செய்ய இன்று எம்மால் இயலுமாயிற்று. எமது தரைப்படை, கடற்படை, வான் படை, பொலிஸ், பொலிஸ் விசேட செயலணி சிவில் பாதுகாப்புச் சேவை ஆகிய எல்லோரும் தமக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை முறையாகவும் ஆகக் கூடிய



அர்ப்பணிப்புடனும் நிறை வேற்றியமையினால் அந்த மகத்தான வெற்றி இன்று எமது நாட்டுக்குக் கிடைத்துள்ளது.

நண்பர்களே,

சரித்திரம் பூராகவும் காட்டிக்கொடுத்தல், அடிபணிதல் போன்றவை இருந்தன என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதன் காரணமாக, அபகீர்த்திக்கு ஆளானவர்களும் எமது நினைவிற்கு வருகின்றனர். அதேபோன்று, வீரம், மகத்துவம், தேசப் பற்று ஆகியவற்றினால் முழுமையடைந்த துட்டகை முனு, கஜபா, விஜயபாகு போன்ற மன்னர்களைப் பற்றி இன்றும் நாம் நினைவுபடுத்திப் பேசுகின்றோம் அல்லவா?

எமது படைகள் அந்தக் கடந்தகால வீர மிக்க கௌரவத்தை உயர்ந்த மட்டத்தில் பாதுகாத்து எதிர் காலத்திடம் ஒப்படைத்துள்ளது. உலகத்தின் மிகப் பெரிய பயங்கரவாத இயக்கமாக அழைக்கப்பட்ட எல். ரி. ரி. ஈ. இயக்கம் நாட்டின் ஒற்றையாட்சிக்கும் சுயா தீனத்திற்கும் ஏற்படுத்திய பயமுறுத் தலைச்சுக்கு நூறாக்குவது எளிதானதொரு காரியமல்ல.

நாட்டில் கௌரவமான சமாதானத்தை உருவாக்கக்கூடிய தொரு நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அதி சிறந்த சந்தர்ப்பத்தை தமது தாய் நாட்டுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு அவர்கள் தமது உடலின் அங்கங்களை மாத்திரமல்ல, தமது உயிரையே தாய் நாட்டுக்காகத் தியாகம் செய்தார்கள்.

உருவாகிக் கொண்டிருக்கின்ற கௌரவமான சமாதா ணம் வேறு எந்த நாட்டிலும் வாழுகின்ற, மக்கள் அனுபவிக்கின்ற சமாதானத்தை விட மிக முக்கியத்துவம் வாய்ந்ததற்கான காரணம், அந்தப் படை வீரர்களின் அளப் பரிய தியாகத்தினால் இந் தச் சமாதானம் ஏற்பட்டமையே.

நண்பர்களே,

இந்த வெற்றியின் பின்னாள் பல காரணிகள் உள்ளன. பொருளாதாரக் கஷ்டங்களுக்கு மத்தியில் வ ாழுகின்ற எமது சகோதர மக்கள், எவ்வித பேதமுமின்றி இந்த வெற்றியைப் பெற்றுத்தந்தார்கள். எங்களுக்கு ஒத்தாசை வழங்கினார்கள். பிரி வினை வாத பயங்கரவாதத்திற்கு எதிராக சரியான தொரு போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம் என்பதை அவர்கள் சரியாகப் புரிந்து கொண்டுள்ளார்கள். சரித்திரத்தில் எந்த வொரு காலத்தையும் விட எமது நாட்டின் தாய்மார், தந்தைமார் தமது பிள்ளை களைப் பாதுகாப்புப் படைகளுக்கு, பொலிசுக்கு, சிவில் பாதுகாப்புச் செயலணிக்கு பெருமளவில் பெற்றுத் தந்திராவிட்டால் எமக்கு இந்தப் போராட் டத்தில் ஒரு நாளும் வெற்றி பெற முடியாது போயிருக்கும்.

தமது அறிவின் மூலமே எமது படையினர் இந்த வெற்றியைப் பெற்றுத் தந்தார்களே தவிர, வேறெந்த வெளி நாட்டு விசேட நிபுணர்களின் உதவியை எமது படைகள் பெற்றுக் கொள்ளவில்லை. அதே போன்று எமது படையினுள் விசேட தன்மைகள் நிலவின.

அதனால் தான், எந்த நேரத்திலும் அவர்கள் எங்களால் முடியாது என்று சொல்லவில்லை. "நாட்டுக்காக நாங் கள் இப்பணியை எப்படியாவது செய்து முடிக்க வேண்டும்" என்பதை மாத்திரமே அவர்கள் எப்போதும் சிந்தித்தார்கள். அவ்வாறு சிந்தித்து பணியாற்றக்கூடிய தைரியம் எமக்குத் இருந்தமையினால் தான் எமது நாட்டுக்கு இந்த வெற்றி கிடைத்தது ஒன்றை மறந்து விட வேண்டாம்!

அண்மைகாலச் சரித்திர த்தில் உலக த்தின் பல நாடுகளில் நிலவிய பிரிவினை வாத பயங்கரவாத இயக்கங்கள் அங்கெல்லாம் அநேகமாக வெற்றி பெற்றன ஆயினும், இலங்கையில் பயங்கரவாதத்தைத் தோல்வியுறச் செய்து, பிரிவினை வாதத்தையும் தோல்வியுறச் செய்து, நாட்டின் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க எம்மால் முடிந்துள்ளது.

உலகத்தில் எத்தனை நாடுகள் இருந்தாலும், ஒருவருக்கு தான் பிறந்த நாடு போன்று பாதுகாப்பனதொரு இடம் வேறு இருக்காது. இருபது ஆண்டுகளுக்கும் மேலான இந்த துரதிஷ்ட வசமான பிணக்கினால் தாய் நாட்டை விட்டுச் சென்று வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் தாம் பிறந்த நாட்டுக்கு, தான் வாழ்ந்த கிராமத்துக்கு திரும்பி வருவதற்கு இப்போது சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது யுத்தத்தின் காரணமாக தாய் நாட்டை விட்டுச் சென்ற இலங்கையர்களான சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர், மலாயர் உட்பட எல்லாப் பிரஜைகளையும் மீண்டும் பிறந்த தேசத்துக்கு வருமாறு நான் இச் சந்தர்ப்பத்தில் முழுத் தேசத்தின் சார்பில் பகிரங்க அழைப்பு விடுக்கின்றேன்.

நண்பர்களே,

சிலர் தோல்வி அடையச் செய்ய முடியாது என அடிக்கடி சொன்ன பிரிவினைவாத பயங்கரவாதத்தை இன்னும் சில நாட்களில் முற்று முழுதாக தோல்வி யுறச் செய்வோம் என்பதில் எனக்கு நல்ல நம்பிக்கையுண்டு. ஆனாலும், அத்துடன் எம் முன்னுள்ள சவால் முழுமையாக முடிந்துவிட்டது என நாம் சிந்திக்கக் கூடாது.

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை சில துறைகளில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுள்ளது. சிறு வர் சுகாதாரம், கல்வி ஆகிய துறைகளில் நாம் திருப்தியடையக்கூடிய நிலையைப் பெற்றுள்ளோம். எமது பிள்ளைகளில் நூற்றுக்கு 97 வீதமானோர் கல்வி பெறுவதற்காக பாடசாலைக்கு உட்பிரவேசிக் கின்றனர். உலகத்தின் பல நாடுகளில் இலவச சுகாதார சேவை, இலவசக் கல்வி போன்றவை மக்களுக் குப் பெற்றுக் கொடுக்காத போதிலும் நாம் அந்தச் சமூகப் பொறுப்புக்காக அர்ப் பணித்த அரசொன்றை உருவாக்கியுள்ளோம்.

ஆயினும், சந்தோஷப்படக்கூடிய இவ்வாறான விடயங்கள் இருந்தாலும், எம்மால் வெற்றி பெற வேண்டிய பல சவால்கள் எஞ்சியுள்ளன.

பாடசாலைக்கு அனுமதிக்கப்படுகின்ற பிள்ளைகளுக்கு இதை விடக்கூடுதலான திறனுள்ள, தேசத் தின் எதிர்காலப் பயணத்திற்குப் பொருத்த மான கல்வியை நாம் பெற்றுக் கொடுக்க வேண்டும். வறுமை எங்கு தலை தூக்குகின்றதோ அதேயிடத் தில் நாம் அதைக் தோல்வியுறச் செய்தல் வேண்டும் மனோபாவ ரீதியில் மாற்றமுள்ள அரச சேவை யொன்றை நாம் மீண்டும் உருவாக்க வேண்டும். தனது எஜமான் மக்கள் தான் என்று கவனிக்கக் கூடிய நிலைக்கு அரச சேவை கொண்டு வரப்படல் வேண்டும் மோசடிக்கும், வீண்விரயத்துக்கும் இடமளிக் காத நல்லாட்சி -கொண்ட - சௌபாக்கியமானதும், சுபீட்சமானதுமான தேசமொன்றை உருவாக்க வேண்டிய உண் மையான சவால் எம் அனைவரின் முன்னால் உள்ளது.

நண்பர்களே,

எம் மு ன்னாள் எழுந்திருந்த பலம் வாய்ந்த ஓர் எதிரியை எமது தேசம் இப்போது தோல்வியுறச் செய்து கொண்டிருக்கின்றது. அதே போன்று, எம் முன் எழுந்துள்ள ஏனைய உள் நாட்டு எதிரிகளை யும் தோல்வியுறச் செய்வதற்கு இப்போது எமக்கு முடியுமானதாக இருத்தல் வேண்டும். அந்தப் புதிய சவால்களுக்கு தேவையான விதத்தில் எம்மை மாற்றியமைத்துக்கொள்ள நம் அனைவருக்கும் இயலுமானதாக இருத்தல் வேண்டும். தேசம் என்ற வகை யில் ஒன்று பட்டு, குறிக்கோள்களுடன் சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் ரீதியாக எழுந்து நிற்கக் கூடிய புதியதொரு சந்தர்ப்பம் உருவாக்கப்பட்டுள்ளமை நல்ல தொரு காரிமாகும்.

நண்பர்களே,

காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுபட்டு 61 ஆண்டுகளுக்குப்பின், தேசத்தை மீண்டும் மகத்துவத் துடன் உயர்த் தி வைப்பதற்கு சரித்திரம் எமக்குப் பெற் றுத் தந்துள்ள இந்தப் புதிய சந்தர்ப்பத்தினை விரயமாக்காமல் சரியாக உள்வாங்கிக் கொள்வதற்கு நாம் அனைவரும் இப்போது தயாராக இருக்க வேண் டும்.

சமூக அநீதிகளை விதைத்த காலம் கடந்த காலத்துக்கு உரியது! சமூக நீதியைக் கட்டியெழுப்பு கின்றவர்களுக்கே எதிர் காலம் உரியது!

நண்பர்களே!

எமது நகரங்களில் மிளிருகின்ற பாரிய விளம்பரங்களின் மூலம் எமது அபிவிருத்தியின் அளவு வெளிப்படுகின்றதென நான் நம்பமாட்டேன் எமது மக்களின் முகங்கள் எமது பிள்ளைகளின் முகங்கள் மகிழ்ச்சியினால் மிளிருகின்ற அளவுக்குத்தான் எமது அபிவிருத்தியை அளவிட முடியும் என நான் நம்புகின்றேன் அதற்காக நாம் கடினமாக உழைக்க வேண்டியுள்ளது.

காலத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற சவால்க ளுக்கு ஏற்றவிதத்தில் நாம் மாற்றமடைய வேண்டும். இல்லையெனில், நாம் மேடையிலிருந்த இறங்கிச் செல்லலாம்.

நண்பர்களே,

உலக வங்கியின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான ஜேம்ஸ் வுல்பன்ஸன் அவர்கள் 1998 யூலை 05 ஆம் திகதி இவ்வாறு குறிப்பிட்டார்.

'ஓர் இடத்தில் சமூக, பொருளாதார எதிர்பார்ப்புக் கள் சுக்குநூறாகிப்போனால் அங்கு சமாதானத் திற்கு சிறிய இடம் மாத்திரமே இருக்கும். அதே போன்று அதன் நீடுறுதிக்கும் சிறு இடம் மாத்திரமே இருக்கும்'

நானும் இதனை உறுதியாக நம்புகின்றேன் தற்போது நாம் பயங்கரவாதத்தினால் மனிதர்கள் மடி யாத நாடொன்றை உருவாக்கதி வருகிறோம். அதே போன்று சமூக, பொருளாதார எதிர்பார்ப்புக்கள் சுக்கு நூறாகாத மக்கள் வாழுகின்ற நாடாக எமது நாட்டை நாம் மாற்றியமைக்க வேண்டும். அப்படியில்லையென்றால், சமாதானத்திற்கும் அதன் நீடுறுதிக்கும் சிறிய இடம் மாத்திரமே இருக்கும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

யுத்தத்தினால் பெற்ற வெற்றியை ஏர் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். இல்லையெனில் அவை யுத்தத்தினாலேயே பறிக்கப்பட்டுவிடும். எனவே நாம் உருவாக்குகின்ற சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு எமது நாட்டை முன்னெடுத்துச் செல்லத் தயாராக வேண்டும். இறைமை மக்களிடமே உண்டு என்பதை அவர்க ளுக் குப் புரியவைக்கும் நிலைமையை ஏற்படுத்த வேண்டி யது எமது பொறுப்பாகும். எல்லாம் மக்களுக்கும் தேவையான விதத்தில் அது அமைந்துள்ளது என்பதை நம்புவதற்கு முடியாவிடின் அந்த இறைமையின் சக்தி பலவீனம் அடையும் இந்த நாட்டின் விவசாயக்காணிகள், இயற்கை வளங்கள் கடல் -மீன் வளம் ஆகிய எல்லாவற்றினதும் சொந்தக்காரர்கள் நாங்களே என்ற நிலைமையை உருவாக்காமல் நாட்டுக் குப் பெற்றுக்கொடுக்கக்கூடிய மாற்றம் தான் என்ன?

வாழ்வதற்கு காணி, வீடு பிள்ளைகளுக்கு நல்ல கல்வி. தொழில்வசதி ஆகியவற்றை ஏழைகளுக் குப் பெற்றுக்கொடுக்காமல் இறைமையின் பலத்தை உறுதிப்படுத்துவது எப்படி? தமது வாழ்க்கையிலே மாற்றத்தை ஏற்படுத்தாத புதியதொன்றை உருவாக் காத பலத்தினால் அவர்களுக்கு நன்மை ஏது ம் இருக் குமா?

நண்பர்களே,

மகத்துவமிக்க இந்நாளில் இறுதியாக நான் உங்களுக்கு முக்கிய விடயம் ஒன்றைக் கூறுவதற் குச் சந்தர்ப்பம் தாருங்கள்.

நாம் பெற்ற அனுபவங்களினூடாக நாம் பெற் றுக் கொண்ட அறிவை அடிப்படையாக வைத்து இந்த நாட்டை எதிர்கால வெற்றிக்கு விட்டுச்செல்ல எம்மால் முடியும் என்ற நம்பிக்கையின் மீது காலடி வைத்து நில்லுங்கள் என நான் உங்கள் அனை வரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

உற்சாகம் கொண்ட -என்றாலும் அமைதியான சிந்தையுடன்த அவசரமாக -என்றாலும் முறை யான வாழ்க்கையுடன், நாம் எமது நாட்டை ஏற்றி வைப்பதற்கு தயாராவோம். சவால்களுக்குப் பயப்படா திருப்போம் எதிர்பார்ப்புகளை நோக்கிச் செல்வதற் குத் ஶ்தைரியம் கொள்வோம்.

அதேபோன்று வடக்கு, கிழக்கு பிரதேச மக்கள் மகிழ்சியையும் சுதந்திரத்தையும் நோக்கி காலடி எடுத்துவைக்க தேசத்தின் எல்லா மக்களினதும் ஒத்துழைப்பை அவர்களுக்குப் பெற்றுக்கொடுப்போம்.

உங்கள் அன்பு, நட்பு, சௌபாக்கியம், சுபீட்சம் ஆகியவற்றை அவர்களுக்கு சொல்லாலும் செயலாலும் வழங்க முன்வருவோம்.

நண்பர்களே,

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவம் வானிலும் நனிசிறந்தனவே என்று சொல்லப்படு கின்ற நல்வாக்கை நாம் மதிக்கின்றோம். எமது தாய் நாடு ஒரே கொடியின் கீழ் வருகின்ற இந்தச் சந்தர்ப் பத்தில் இன, மத, குல, கட்சி பேதம் பாராது எம்முடன் ஒன்றுபடுமாறு தாய் நாட்டுக்கு தமது கடமைகளை நிறைவேற்ற யாவருக்கும் சந்தர்ப்பம் வழங்கும் பொருட்டு நான் எல்லா கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கின்றேன். நாம் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகளாக இருப்பதைப் போன்ற மகிழ்சியை விட இலங்கை மாதாவுக்கு வேறு என்ன மகிழ்சி தா ன் இருக்கமுடியும்? அந்த மகிழ்சியை எமது தாய் நாட்டுக்கு உங்கள் அன்னைக்கு பெற்றுக்கொடுப் பதற்காக எம்முடன் ஒன்று படுமாறு உங்கள் அனை வரையும் நான் வேண்டுகின்றேன்.

எல்லாவித பேதங்களையும் கொண்ட எண்ணாங்களிலிருந்து நீங்கி, எமது நாட்டின் நாலா புறங்களிலும் சந்தோஷத்துடன் வாழ்கின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர், மலாயர் ஆகிய எல்லா இனாங்களுக்குமுரிய இலங்கைத் தாயின் பிள்ளைகளைப் பாருங்கள்! அவர்கள் நம்பிக்கை யுடன் எம்மைப் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள், அவர்கள் எம்மை விசாரிக்கின்றார்கள். அவர்களின் எதிர்காலத்தை எம்மிடம் வேண்டி நிற்கின்றார்கள். நாட்டின் எதிர் காலம் அவர்களே, அவர்களுக்காக எமது தேசத்தை புதிய வழியில் இட்டுச்செல்வதற்கு உங்கள் அனை வருக்கும் சக்தியும் தைரியம் கிடைக்கட்டும்!

உங்கள் அனைவருக்கும் மும்மணிகளின் ஆசிகள்!

# ஈழத்தமிழர்களுக்கான போராட்டங்கள் குறித்து தேர்தலில் தனித்து விடப்பட்டாலும் கவலையில்லை

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் தெரிவிப்பு



(சென்னை)

இலங்கைத் தமிழர் ஆதரவு காரணமாக நாடாளுமன்றத் தேர்தலில் தனித்து விடப்பட்டாலும் கவலையில்லை என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தவைர் தொல் திருமாவ ளவன் கூறினார்.

இலங்கையில் இனப் படுகொலையை நிறுத்தக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் தொடர் உண்ணா விரதம் மேற்கொண்டு வருகின்றனர்.

அதில் பங்கேற்று செவ்வாய்க்கிழமை அவர் பேசுகையில், இலங்கையில் நடைபெறும் இனப் படு கொலை குறித்து மத்தியில் ஆட்சியில் இருப்பவர்களுக்குப் புரியவைத்து போரை நிறுத்த வேண்டும் என்பது சிலரது வாதம்.

ஈழத் தமிழர்களை அழித்தொழிக்கும் படுபாதகச் செயலைச் செய்வதே இந்திய அரசுதான் இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்றும் மூன்று முறை சட்டப் பேரவையில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

அனைத்துக் கட்சிக் குழுவினர் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் நேரில் வலியுறுத்தினர். தமிழக தலைவர்களின் கோரிக்கைகள் மத்திய அரசால் பொருட்படுத்தப்படவில்லை.

இலங்கை இராணுவத்துக்கு ஆதரவாக மத்திய அரசு ஆள் அனுப்புகிறது. பயிற்சி தருகிறது. புதிய ஆயுதங்களை வாங்க கடன் உதவி அளிக்கிறது

ஈழத்தமிழர்களை அழிக்கும்செயலில் வெளிப்படையாக இந்திய அரசு ஈடுபட்டுள்ளது. இதை தோழமை அடிப்படையில் எடுத்துச் சொல்லி நிறுத்த முடியாது.

இந்திய அரசை பணிய வைக்கக் கூடிய போராட்டங்களில் நாம் இறங்க வேண்டும்.

இதற்காக நாடாளுமன்றத் தேர்தலில் எங்கள் கட்சி தனித்து விடப்பட்டாலும் கவலையில்லை. இனமே அழிகிறபோது, எம்.பி. பதவி போனால் போகிறது. தமிழகத்தில் புதன்கிழமை அழைப்பு விடுக்கப்பட்டுள்ள பொது வேலை நிறுத்தம் தமி ழக அரசுக்கு எதிரானது அல்ல இந்திய அரசைப் பணிய வைக்கவே இந்த வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தி.மு.க. சார்பில் அறிவிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர் உரிமைப் பேரவையை மனதார வரவேற்கிறேன்.

இந்தப் பிரச்சினையில் காங்கிரஸ் தவிர்த்து முதல்வர் கருணாநிதி தலைமையில் அணி திரளவே நாங்கள் விரும்பினோம் அது நிகழவில்லை. எனவே இலங்கைத் தமிழரின் நலன் காக்க பொது வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம் தமிழகத்தின் மனக் குமுறலை மத்திய அரசுக்கு வெளிப் படுத்தும் வகையில் அனைத்து மக்களும் இதில் பங்கேற்க வேண்டும் என்றார். திருமாவளவன். (ஓ-6)


## முதல்வர் கருணாநிதி மீண்டும் மருத்துவமனையில்



(சென்னை)


அண்ணாவுக்கு அஞ் சலி, அமைச்சரவைக் கூட்டம், செயற்குழு ஆகி யவற்றை முடித்துக் கொண்டு மீண்டும் மருத் துவமனை திரும்பினார் முதல்வர் கருணாநிதி.

கடும் முதுகுவலி காரணமாக, கடந்த 26 ஆம் திகதி சென்னை போரூரில் உள்ள இராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார். பிசியோதெரபி உள்ளிட்ட சிகிச்சைகள் அவருக்கு தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. (ஓ-6)




# மும்பைத் தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தானிடமிருந்து இதுவரை எந்தவித அதிகார பூர்வ பதிலும் இல்லை

## பிரணாப் முகர்ஜி தெரிவிப்பு



(புதுடெல்லி)

மும்பை தாக்குதல் தொடர்பாக இந்தியா கொடுத்த தகவல்களுக்கு பாகிஸ்தான் இதுவரை அதிகார பூர்வமாக எந்த பதிலும் தரவில்லை என்று வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறினார்.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில், ,மும்பை தாக்குதல் தொடர்பாக இந்தியா கொடுத்த ஆதாரங்கள் குறித்து பாகிஸ்தான் ஒரு முறை கேட்ட கேள்விகளுக்கு நாம் பதில் தந்து விட்டோம்.

மீண்டும் 2 ஆவது முறையாக கேள்விகளை கேட்டுள்ளது. அதற்கும் நாம் பதில் கொடுத்துள்ளோம், என்றார். ஆனால், இதை, பிரணாப் முகர்ஜி மறுத்துள்ளார். டெல்லியில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் அவர் கூறியதாவது,

மும்பைத் தாக்குதல் தொடர்பாக நாம் கொடுத்த ஆதாரங்கள் மற்றும் தகவல்கள் குறித்து பாகிஸ்தானிடமிருந்து இதுவரை எந்த அதிகாரபூர்வமான பதிலும் வரவில்லை. இந்தக் கருத்தைத்தான் நாராயணன் தனது பாணியில் சொல்லியுள்ளார்.

மும்பைத் தாக்குதல் தொடர்பாக அவர்கள் நடத்திய விசாரணை பற்றிய தகவல் எதுவும் பாகிஸ்தானிடமிருந்து வரவில்லை என்பது தான் உண்மை. பாகிஸ்தானிடமிருந்து அதிகாரபூர்வமான தகவல்களை எதிர்பார்த்து கொண்டிருக்கிறோம்.

ஐ.பி. எல், கிரிக்கெட் போட்டியில் பங்கேற்க தனது வீரர்களுக்கு பாகிஸ்தான் தடை விதித்துள்ளது பற்றி எதுவும் சொல்ல முடியாது. கிரிக்கெட்டில் அரசியல் நுழைவதை ஏற்கக் கூடாது. நாம் கூட சில காரணங்களுக்காக பாகிஸ் தான் சுற்றுப் பயணத்தை ரத்து செய்துள் ளோம். இவ்வாறு பிரணாப் முகர்ஜி கூறினார். (ஓ-6)

# இலங்கைப் படையினரால் அப்பாவி தமிழர்கள் படுகொலை

## பா.ஜ.க. தலைவர் அத்வானி கவலை

இலங்கைப் படையினரால் அப்பாவி தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு வருவது தொடர்பாக இந்திய நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவரும் பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதம வேட்பாளருமான எல். கே. அத்வானி கவலை தெரிவித்துள்ளார்.

இந்த பிரச்சினையை மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு உணர்வு பூர்வமாக கையாள வில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

தமிழக பா. ஜனதா தலைவர் எல். கணேசன் மற்றும் தேசிய நிர்வாக குழு உறுப்பினர்களுடன் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அவர் ஆலோசனை நடத்தினார்.

போர் முனையில் சிக்கியுள்ள பொதுமக்களைப் பாதுகாப்பான பகுதிக்கு வெளியேற்ற அமைப்பு ரீதியான ஆக்கபூர்வ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கூட்டத்தில் வற்புறுத்தப்பட்டது.

இந்த பிரச்சினையில் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கை நிலைமையை மேலும் சீர்குலைக்கவும், இலங்கையில் இருந்து வரும் அகதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் வழிவகுக்கும் என்றும் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது. (ஓ-6)



இலங்கையில் யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட வேண்டும் எனக்கோரி தமிழகத்தில் தீக்குளித்து மரணித்த ரவியின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்ட ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் ஆகியோர் அழுது புலம்பும் ரவியின் மனைவிக்கு ஆறுதல் கூறுவதைப் படத்தில் காணலாம்.

# நாடாளுமன்றம் எதிரில் பெப். 12 இல் மறியல் போராட்டம்

## ஈழத் தமிழ் தோழமைக் குரல் அறிவிப்பு

(சென்னை)

ஈழத் தமிழர் தோழமைக் குரல் அமைப்பு சார்பில், நாடாளுமன்றம் எதிரில், வரும் 12 ஆம் திகதி மறியல் போராட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்த இயக்கத்தின் அமைப்பாளர்கள் லீனா மணிமேகலை, பா. செயப் பிரகாசம் ஆகியோர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

ஈழத்தில் நடைபெறும் இனப் படுகொலைகளுக்கு எதிராக மாணவர் கூட்டமைப்பு, படைப்பாளிகள், கலைஞர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், பெண்கள், பத்திரிகையாளர்கள், திருநங்கைகள், தகவல் தொழில் நுட்ப வல்லுநர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோர் இணைந்து ஈழத் தமிழர் தோழமைக் குரல் என்ற புதிய அமைப்பை உருவாக்கியுள்ளோம்.

இந்த அமைப்பு சார்பில், இனப்படுகொலை போருக்கு இந்திய அரசு துணை நிற்கக் கூடாது ; தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு அங்கீகாரம் வழங்க வேண்டும் ; விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும்.

தமிழீழ மக்களின் வாழ்வுரிமையை உறுதி செய்ய வேண்டும் ; மீனவர்களைக் கொன்ற இலங்கை அரசு மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பவை உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி,நாடாளுமன்றம் எதிரில் 12 ஆம் திகதி பேரணி மற்றும் மறியல் போராட்டம் நடத்தப்படும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-6)

# இலங்கையில் போரை நிறுத்த வலியுறுத்தி 100 கி.மீ. தூரம் தொடர் ஓட்டம்

## அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் தீர்மானம்

(சென்னை)

இலங்கையில் போரை நிறுத்த வலியுறுத்தி 100 கிலோமீற்றர் தூரம் தொடர் ஓட்டம் நடத்த அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் தீர்மானித்துள்ளது.

அம்மன்றத்தின் மாநில நிர்வாகக் குழுக் கூட்டம் சென்னையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலங்கையில் போரை நிறுத்தவும் இலங்கைக்கான இந்திய அரசின் இராணுவ உதவிகளை நிறுத்தக் கோரியும், தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கைக் கடற்படையால் கொல்லப்படுவதைக் கண்டித்தும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் சார்பில் 100 கி.மீ. தூர தொடர் ஓட்டம் நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டது.

மாணவர்கள், இளைஞர்கள் பங்கேற்கும் இந்தத் தொடர் ஓட்டம் பெப்ரவரி 21 ஆம் திகதி திருவாரூர் மாவட்டம், கோவில் வெண்ணியில் தொடங்கும். 22 ஆம் திகதி நாகை மாவட்டம், கோடியக்கரையில் முடிவடையவுள்ளது. தொடர் ஓட்டப் பாதையில் நீண்ட மனிதச் சங்கிலி அமைக்கப்படவுள்ளது. இதில் கலை உலகத்தினர், விளையாட்டு வீரர்கள் பெருமளவில் தொடர் ஓட்டத்தில் பங்கேற்க உள்ளனர். (ஓ-6)

> அரசன் என்பதற்காகவோ அழகி என்பதற்காகவோ யாரையும் நேசிப்பதில் ஒரு சிறப்புமில்லை. இரண்டுமே மாறக் கூடியது. இதயம் மட்டும் அழகாக இருந்தால் போதும். மாறாக இதயம் அன்பினை அதிகப்படுத்தும்
> ~ அலெக்சாண்டர் போப்

வலம்புரி

## ஈழத்தமிழர் மீது அகாஷிக்கு ஏன் இந்தக் கோபம்?

ஜப்பான் நாட்டின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூசி அகாஷியின் நடவடிக்கைகள் ஈழத்தமிழருக்கு எதிரானவையாக அமைந்துள்ளன.

இலங்கையின் நோர்வே சமாதான முயற்சிகளை மேற்கொண்டபோது சிவபூசையில் கரடி நுழைந்தது போல யசூசி அகாஷி இலங்கைக்கு வந்தார்.

பல தடவைகள் இலங்கைக்கு வந்த அவர் வன்னிப் பகுதிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்தார்.

அவரின் வன்னிக்கான விஜயமொன்றின் போது விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திக்க விரும்பினார்.

எனினும் அந்த சந்திப்பு நடைபெறவில்லை பிரபாகரனைச் சந்திக்காமை அகாஷிக்கு பெருத்த ஏமாற்றமாக இருந்தது.

இதன் பின்னர் அவரின் நடவடிக்கைகள் அனைத்தும் ஈழத்தமிழர்களுக்கு எதிரானவையாகவே அமைந்துள்ளன.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மோசமாக இடம்பெறுவதாக குற்றம் சுமத்திய இணைத்தலைமை நாடுகள், அது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட முற்பட்டபோது, இணைத் தலைமையில் முக்கிய இடத்தை வகித்த ஜப்பான் அந்த அறிக்கையை வெளியிடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது.

இதனால் இணைத்தலைமை நாடுகளின் அறிக்கை வெளிவராமல் போயிற்று.

இதேபோன்று இலங்கை அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாதவரை இலங்கைக்கான நிதி உதவியை நிறுத்துவதாக முடிவெடுக்கப்பட்டபோது அந்த முடிவுக்கு முரணாக இலங்கைக்கு நிதி உதவி வழங்கப் போவதாக ஜப்பான் அறிவித்தது.

மீள் குடியேற்றம், மிதிவெடி அகற்றல், புனர்வாழ்வு என்பவற்றுக்காக நிதி உதவி வழங்குவதாகக் கூறி இணைத் தலைமை நாடுகளின் முடிவை ஜப்பான் முறியடித்தது.

மீள்குடியேற்றம், மிதிவெடி அகற்றல், புனர்வாழ்வு என்பன அனைத்தும் தமிழர் பகுதிக்குரியவை.

அப்படியானால் ஜப்பானின் நிதி உதவி தமிழர் பகுதியிலேயே செலவிடப்படும் என்பது போன்றதோர் மாயை ஏற்படுத்தப்பட்டது.

இவையனைத்தினதும் பின்புலத்தில் இருந்தவர் ஜப்பான் நாட்டின் விசேட தூதுவர் யசூசி அகாஷி என்பது மறுக்கமுடியாத உண்மை.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் தன்னைச் சந்திக்கவில்லை என்ற ஒரே காரணத்திற்காக யசூசி அகாஷி தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டுக் கொள்வது அவருக்கும் அவரின் நாட்டிற்கும் அழகல்ல.

உலக மகா யுத்தத்தில் பேரவலத்தைச் சந்தித்து இலட்சக்கணக்கான மனித உயிர்களைப் பலிகொடுத்த ஜப்பான் எந்தவொரு மனித அழிவுக்கும் காரணமாக இருக்கக் கூடாதென்பதில் உறுதியாக இருக்க வேண்டும்.

தனியொரு மனிதரான அகாஷி தனது சுய கௌரவத்திற்காக இலங்கைத் தமிழருக்கு எதிராகச் செயற்படுவதை விடுத்து, இலங்கையில் சமாதானம் ஏற்பட்டு எல்லா இன மக்களும் ஒற்றுமையாக வாழ உதவ வேண்டும்.

இதற்காக அவர் பாடுபட்டால் அவரின் பெயர் சமாதானத்தின் வரலாற்றில் பதிவாகிக் கொள்ளும். அது அவருக்கும், ஜப்பான் நாட்டுக்கும் தேய்வில்லாத புகழையும் பெருமையையும் கொடுக்கும்.

# ஐரோப்பிய நிறுவனமொன்று விடுதலைப் புலிகளுக்கு உதவி

## அமைச்சர் டலஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

முல்லைத்தீவில் மீட்கப்பட்ட விடுதலைப் புலிகளின் நீர்மூழ்கிக் கப்பல் ஐரோப்பிய நிறுவனம் ஒன்றால் தயாரிக்கப்பட்டது என போக்குவரத்துத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறினார்.

மீட்கப்பட்ட அந்த நீர்மூழ்கிக் கப்பலின் சில பாகங்கள் சுவிஸ்லாந்தின் பேஸ்லி நகரிலுள்ள ஹொஸ்லர் எனும் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டவை.

2002ஆம் ஆண்டு பேச்சுவார்த்தை காலப் பகுதியில் விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவினர் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த போதே இவற்றுக்கான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இந்த நகரில் மூன்று நாட் கள் தங்கியிருந்துள்ளார் என அமைச்சர் கூறினார்.

இதேவேளை நோர்வே மற்றும் சுவிஸ் நாடுகளைச்சேர்ந்த நிறுவனங்களால் உயர்தொழில்நுட்பம் வாய்ந்த உபகரணங்கள் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறித்து விசாரணைகளை நடத்துமாறு இலங்கை பாதுகாப்புத்தரப்பினர், சர்வதேசப் பொலிஸான இண்டர்போலிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உலகத்திலேயே விமானங்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களை வைத்திருந்த முதலாவது பயங்கரவாத அமைப்பு விடுதலைப் புலிகள் அமைப்பே எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட நான்கு நீர்மூழ்கிக் கப்பல்களும் 35 அடி நீளமானவையெனக் கூறப்படுகிறது.

## புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலை ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் நடப்பாண்டுக்கான நிர்வாகசபை வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர் சி.வைரவநாதன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது.

சங்க போஷகராக வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.தயாளன், தலைவராக வைத்திய கலாநிதி இ.பரமேஸ்வரன், செயலாளராக சி.வைரவநாதன், பொருளாளராக க.ஜெகதீசன் மற்றும் 10 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

(ஓ-29)

## தமிழ் நாட்டில் மாணவர்கள் மீது காவல் துறையினர் தாக்குதல்

(சென்னை)

தமிழ் நாட்டில் ஈழத் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாக மாணவர்கள் சார்பாக தமிழீழ மாணவர்கள் போராட்டக்குழு என்ற ஒரு அமைப்பை மாணவர்கள் தொடங்கியுள்ளனர்.

பல கல்லூரிகளைச் சார்ந்த மாணவர்கள் இவ் வமைப்பில் இணைந்துள்ளனனர். அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு இந்த போராட்டக்குழு தொடங்கப்பட்டுள்ளது .

அவர்கள், இந்திய அரசே போரை நிறுத்து ஈழத் த்மிழ் மக்களை காப்பாற்று,தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரி விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கு ஆகிய கோரிக்கைகள் வலியுறுத்தி சென்னை அண்ணா சாலை யில் ஆர்ப்பாட்டம் செய்யும் பொழுது அவர்களை காவல் துறையினர் கண்மூடித்தனமாக தாக்கியுள்ளனர்.

காவல் துறையினரின் கண் மூடித்தனமான தாக்குதலுக்கு பிறகு அந்த மாணவர்கள் சாகும் வரை உண்ணா நிலையை தொடரப்போவதாக அறிவித்துள்ளனர். (ஓ-6)

## இலங்கை நிலைவரம் தொடர்பாக ஐக்கிய இராச்சிய மற்றும் அமெரிக்க வெளியுறவு செயலர்கள் ஆராய்வு

(கொழும்பு)

வெளியுறவு செயலர் ஹிலாரி கிளிண்டனுக்கு அமெரிக்க இராச்சியத்தின் வெளியுறவு செயலர் டேவிட் மிலிபேண்டனும் இலங்கை நிலவரம் குறித்து நேற்று முன்தினம் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் வாஷிங்டனில் உள்ள மாநில திணைக்களத்தில் இடம்பெற்றது. தமது சந்திப்பின் பின்னர் இலங்கையில் மனித உரிமைகள் நிலவரம் குறித்து கூட்ட றிக்கை ஒன்றினையும் இருவரும் வெளியிட்டுள்ளனர்.

இதன் போது வடக்கு பிரதேசத்தின் மனிதாபிமான நிலவரம் குறித்து மிகுந்த கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கை பிரச்சினைக்கு அரசியல் தீர்வின் முக்கியத்துவம் குறித்து இரு தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இணைத் தலைமை நாடுகளுடன் இணைந்து அரசியல் ரீதியான தீர்வொன்றினை இலங்கையில் முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.


இலங்கை அரசாங்கத்திடமும் தமிழீழ விடுதலைப்புலிகளிடமும் தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றினை மேற்கொள்ளும் பொருட்டு இந்த சந்திப்பின் போது அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக மோதல்கள் இடம்பெறும் பிரதேசங்களில் உள்ள பொது மக்களை அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதியாக இருக்கும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் இணைத்தலைமை நாடுகள் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையினை தாம் வரவேற்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ள பாதுகாப்பு வலய பிரதேசங்களில் தாக்குதல்கள் மேற்கொள்வதை இரு தரப்பினரும் தவிர்க்க வேண்டும் என அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

அத்துடன் மோதல்கள் இடம்பெறும் பிரதேசங்களில் இருந்து பொதுமக்கள் வெளியேறுவதற்கு இரு தரப்பினரும் இடமளிப்பதுடன் தொண்டு நிறுவனங்கள் அந்த பகுதிகளில் பணியாற்றுவதற்கும் அனுமதிக்க வேண்டும் என அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருந்தது. (ஓ-6)

## இறைவனே உறவினருக்குள் மிகவும் நெருக்கமானவர்

குமார் எனும் மாணவன் புட்டபர்த்தியிலுள்ள சத்ய சாயி கல்லூரியில் படித்து வந்தான். பகவான் தான் இருக்கும்



இடத்திற்கு அருகில் கிழக்குப் பக்கப்ப குதியில் தரைத்தளத்தில் இருந்த வீடு ஒன்றை அவன் பெற்றோருக்கு அளித்திருந்தார். ஒரு நாள் மாலை பிரார்த்தனையின் போது குமார் சாயியே தந்தை ; சாயியே தாய் எனும் பஜனைப் பாடலைப் பாடிக்கொண்டிருந்தான். பகவானும் அவனுக்கு அருகில் இருந்த தனது நாற்காலியில் அமர்ந்திருந்து, அப்பாடலின் இசைக்கு ஏற்றவாறு தன் தலையை அசைத்த வண்ணம் இருந்தார். அவரது கண்களில் பிரியமும் தயையும் ததும்பி நின்றன. ஆனால் பாடல் முடிவுறாத நிலையில் அவர் திடீரென எழுந்து வெளியே சென்று விட்டார். தான் பாடியது சுவாமிக்கு ஏற்புடையதாக இல்லை என்று குமார் நினைத்தான்.

ஆனால் சுவாமியோ குமாரின் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அண்மைக்காலத்தில் பகவான் வேறு இடங்களுக்குச் செல்வதை பார்த்திராத பக்தர்களுக்கு பகவானின் செயல் ஆச்சரியமாக இருந்தது.

அங்கு குமாரின் வீட்டில் அவன் தாயாருக்கு இதயத் தாக்குதல் ஏற்பட்டு அவள் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தார். அவள் கணவனோ பஜனை மண்டபத்தில் பக்தர்களுடன் உட்கார்ந்திருந்தார். பாபா வீட்டிற்குள் சென்று தண்ணீர் கொடுத்து வீபூதியும் வரவழைத்துக்கொடுத்தார். அத்துடன் அப்பெண்ணிற்கு ஆறுதலும் தைரியமும் அளித்துவிட்டு பஜனை மண்டபத்திற்குத் திரும்பினார். அப்போது குமாரின் பஜனைப் பாடல் முடிவுறும் நிலையில் இருந்தது. பஜனை முடிந்ததும்,சுவாமி குமாரிடம் "நான் ஏன் வேகமாகச்

### ஜெய் சாயிராம்

சென்றேன் என்பது உனக்குத் தெரியுமா? உன் தாயார் சாவும் தருணத்தில் இருந்தால் நீயோ இங்கு,நீ தான் தந்தை,நீ தான் தாய் எனப் பாடிக்கொண்டிருந்தாய். உன் தாய் அங்கு மிகுந்த வேதனையுடன் இருக்கும் போது நான் எப்படி இங்கு உட்கார்ந்து கொண்டு உன் பாட்டை ரசிக்க முடியும்? அதனால்த்தான் அவள் இருந்த இடத்திற்குச் சென்று காப்பாற்ற வேண்டியதாயிற்று" என்றார்.

அந்தப் பெண்ணின் கணவர் முழு நேரமும் பக்தர்களுடன் பஜனை மண்டபத்தில் உட்கார்ந்திருந்தார். அவளின் மகன் அங்கு பாடிக்கொண்டிருந்தான். இருந்தும் அவ்வேளையில் இறைவன் மட்டுமே துன்பப்படும் அந்தப் பெண்மணியை காப்பாற்ற முடிந்திருக்கிறது. சந்தேகம் இல்லாமல் இறைவனே ஒருவரது உற்றார் உறவினருக்குள் மிகவும் நெருக்கமானவரும் அந்தரங்கமானவரும் கூட.

யாதவன்

# உலகில் அதிகூடிய வன்முறை நிகழும் பட்டியலில் இலங்கைக்கு முதலிடம்

அனைத்துலக ரீதியில் பொதுமக்களுக்கு எதிராக அதிகம் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை முதலிடத்தை பிடித்திருக்கிறது.

பெல்ஜியம் பிரசல்ஸ் நகரில் உள்ள உலக வன்முறைகள் கண்காணிப்பு மையம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தத் தகவல் வெளியாகியிருக்கின்றது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் வடபகுதியில் அரச படையினர் மேற்கொண்டுள்ள இராணுவ முன்னெடுப்பில் பல அப்பாவிப் பொதுமக்கள் நாளாந்தம் கொல்லப்படுவதுடன் இவ்வாறு பாதிக்கப்பட்ட அல்லது காயமடைந்த பொதுமக்களுக்கு உதவக்கூடிய பொது உதவி நிறுவனங்களுக்கும் இராணுவ தாக்குதல்கள் குந்தகம் விளைவித்து வருகின்றன.


இலங்கையின் இராணுவ முன்னெடுப்புக்களில் தாம் வெற்றியடைந்து வருவதாக அரசு கூறி வருகின்ற போதிலும், ஏராளமான பொதுமக்கள் ஜனவரி மாதத்தில் கொல்லப்பட்டுள்ளதுடன் தற்போதைய நிலைமை அதை விட மோசமடைந்துள்ளது.

உலகில் தற்போது நடைபெற்று வரும் மிக மோசமான போர் முன்னெடுப்புக்களில் மிக அதிகமான பொதுமக்கள் பாதிக்கப்படும் இடமாக இலங்கையின் வடபகுதி காணப்படுகிறது.

இஸ்ரேலியப் படையினர் முன்னெடுப்பால் பாதிப்படைந்த காசா நிலப்பரப்பு அரசுக்கு எதிரான மக்கள் எதிர்ப்புக்கள் தீவிரமடைந்துள்ள மடகஸ்கார் பகுதி, அரச படைகளுக்கெதிராகப் போர் புரியும் மாலி நாட்டின் றோகக் போராளி களின் போர்ப் பகுதி போன்றன, ஏனைய மூன்று வன்முறை அதிகம் நிறைந்த பகுதிகளாகக் காணப்படுகின்றன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் நாகலிங்கம் கந்தசாமி

*(E.S.P நிறுவன முகாமையாளர்)*

**தோற்றம்: 17.01.1956 இறப்பு:-06.01.2009**

கடந்த 06.01.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரது பேரிழப்பின் போது, எமது துயரத்தை ஆற்றியும், தேற்றியும், ஆறுதல் கூறி அனுதாபங்களைத் தெரிவித்துச் சகல வழிகளிலும் உதவிகள் நல்கிய உள்ளங்களிற்கு எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (05.02.2009) வியாழக் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். (இ)

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

குடும்பத்தினர்.

# பிரபல வர்த்தகர் வெள்ளை வானில் வந்த இனந்தெரியாதோரால் கடத்தல்

(கொழும்பு)

பிரபல வர்த்தகரும் சிங்களபெண்மணியை திருமணம் செய்த மூன்று பிள்ளைகளின் தந்தையுமான ஒருவர் வெள்ளைவானில் வந்த இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் பி.இராதாகிருஷ்ணனிடம் முறையிடப்பட்டுள்ளது.

இது குறித்து காணாமல் போதல் தொடர்பான விசாரணைகளை மேற்பார்வை செய்யும் குழுவிடமும் கடவத்தை பொலிஸாரிடமும் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிய வருவதாவது,

கடந்த திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் இவர் மிகுந்து மாவத்தை கடவத்தையிலுள்ள தனது வீட்டுக்கு காரில் சென்று இறங்கிய போது பலவந்தமாக துப்பாக்கிகளுடன் புகுந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது

குருசாமி முருகேசன்(வயது46) என்ற குடும்பஸ்தரே கடத்திக் காணாமல் போயுள்ளதாக மனைவியான ரம்யாணி வீரசிங்க புகார் செய்துள்ளார்.

கடந்த 2ஆம் திகதி இரவு காரில் வீடு திரும்பிய இவரை சிவில் உடையில் வந்த இருவரும் பொலிஸ்சீருடையில் ஆயுதத்துடன் வந்தவர்களுமே வெள்ளை வானில் கடத்திச் சென்றதாக கடத்தப்பட்டவரின் பிள்ளைகள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

டாம் வீதியிலும் கடவத்தையிலும் தொழில் நிலையங்களை கொண்டுள்ள முருகேசன் சீனி இறக்குமதி வர்த்தகத்திலும் ஈடுபட்டிருந்ததாகவும் குடும்பத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ் விடயம் தொடர்பாக சமூக அபி விருத்தி அமைச்சர் பெ. சந்திரசேகரனுக்கு அறிவிக்கப்பட்டதோடு அவர் உயர் மட்ட பொலிஸாரிடம் இது தொடர்பாக அறிவித்துள்ளார். இக்கடத்தல் தொடர்பாக செஞ்சிலுவை சங்கம் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியோரிடமும் புகார் செய்யப்பட்டுள்ளது. (ஓ-6)

# மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து 90 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்புகளுக்காக சென்று பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து தற்காலிக முகாம்களில் தங்கியிருந்த இலங்கையர்கள் சிலர் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

இவ்வாறு நாடு திரும்பியவர்களுள் 71 ஆண்களும் 19 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இவர்கள் நேற்று அதிகாலை 5 மணிக்கு பின்னர் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து 3 வானூர்திகள் ஊடாக வந்தடைந்ததாக கட்டுநாயக்க வானூர்தி மைய செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

இவர்களை தத்தமது வீடுகளுக்கு அனுப்பி வைக்கும் பொருட்டான நிதியினை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வழங்கியது.

இதேவேளை இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளில் இருந்து சிங்கப்பூருக்கு வேலை வாய்ப்புகளுக்காக செல்பவர்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருவதாக இணையத்தள செய்திகள் தெரிவிக்கின்றன.

உடன்படிக்கைக்கு அமைவான வேதனம் வழங்கப்படாமை, தடுத்துவைத்தல், துன்புறுத்தல் உள்ளிட்ட பல இன்னல்களை இவ்வாறான பணியாளர்கள் மீது பணி வழங்குனர்கள் திணித்து வருவதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)


# யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் -வ.து

கொழும்பிலிருந்து விமானம் மூலம் எடுத்துவரப்பட்டு எமது கூட்டுறவு நகர் 1, 2 கிளை நிலையங்களில் பின்வரும் பொருட்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன

JAFFNA MULTI PURPOSE CO-OPERATIVE SOCIETY LTD
Co-op City
கூட்டுறவு நகர்

எலிபெண்ட் ஹவுஸ் ஐஸ்கிறீம் வகைகள்
**ELEPHANT HOUSE ICE CREAM**

பழ வகைகள்
FRUIT ITEMS
**APPLE (*TOP RED*)**
**ORANGE**

மாசிக்கருவாடு
MALDIVES FISH
100g-150/-
50g-75/-

பிரிமா கோழி இறைச்சி
PRIMA WHOLE CHICKEN
1kg-580/-



பிரிமா சொசேஜஸ்
PRIMA CHICKEN SAUSAGE
150g-225/-
250g-295/-



கோழி பாகங்கள்
*CHICKEN PARTS*

| | |
|---|---|
| Liver | 600/- |
| Drumsticks | 700/- |
| Gizzard | 670/- |
| Whole leg | 675/- |
| Neck | 530/- |
| Chicken Bourn in Thigh | 670/- |
| Back Quarter | 645/- |

குறிப்பு :-

இவ் இறைச்சிப் பொதிகள் கொழும்பிலிருந்து விமானம் மூலம் உடனுக்குடன் தருவிக்கப்பட்டு மிகைக் குளிரூட்டிகள் மூலம் பாதுகாக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

வைபவங்கள் மற்றும் விசேட நிகழ்வுகளுக்கு மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு கொள்வனவு செய்யும் தொகைக் கேற்ப விசேட கழிவு வழங்கப்படும்.

# தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்தில் ஆஸி. அணியில் சைமண்ட்ஸ் இடம்பெறார்

## கிரிக்கெட் சபை அறிவிப்பு

தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்துக்கான அவுஸ்திரேலிய அணியில் சர்ச்சைக்குரிய சகலதுறை வீரர் சைமண்ட்ஸ் இடம் பெறமாட்டார் என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் அன்ட்ரூ சைமண்ட்ஸ் அடிக்கடி சர்ச்சையில் சிக்கிக் கொள்பவர். சமீபத்தில் அவர் நியூசிலாந்து அணியின் சகலதுறை வீரர் மக்கலத்தை கடுமையாக சாடினார்.

மிருகங்களின் கழிவுடன் ஒப்பிட்டு அவரை கேவலமாக சித்திரித்து வானொலிக்கு பேட்டி கொடுத்தார். இதற்கு மன்னிப்பு கேட்டாலும் அவ ருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

தொடர்ந்து சர்ச்சைகளில் மாட்டிக் கொண்டு வருவதால் சைமண்ட்ஸின் கிரிக்கெட் வாழ்க்கை விரைவில் முடிவுக்கு வந்துவிடலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அதனை உறுதிப்படுத்துவது போல் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் நடவடிக்கையும் அமைந்துள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்த மாத இறுதியில் தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறது. அங்கு 3 டெஸ்ட், இரண்டு இருபது-20, 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

இந்த சுற்றுப்பயணத்துக்கான அணித் தேர்வில் சைமண்ட்ஸின் பெயரை பரிசீலிக்க வேண்டாம் என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை, தேர்வுக் குழுவை அறிவுறுத்தி இருக்கிறது.

பிரச்சினைகளில் இருந்து விடுபட சைமண்ட்ஸை தகுந்த நிபுணர்களிடம் கவுன்சிலிங்குக்கு செல்லும்படி ஏற்கனவே கிரிக்கெட் சபை அறிவுறுத்தி இருந்தது.

தகுந்த கவுன்சிலிங் பெற்று அவர் பழைய நிலைக்கு முழுமையாக திரும்ப வேண்டும். அதுவரை அவரை அணித் தேர்வில் கருத்தில் கொள்ள வேண்டாம் என்று தேர்வுக் குழுவை அறிவுறுத்தி இருப்பதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சைமண்ட்ஸ் தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்தில் சேர்க்கப்படமாட்டார். சில மாதங்களுக்கு முன்பு முக்கியமான அணி வீரர் களின் கூட்டத்தில் பங்கேற்காமல் மீன் பிடிக்க சென்றதால், இந்திய சுற்றுப் பயணத்தில் சைமண்ட்ஸ் நீக்கப் பட்டார்.




தொடர்ந்து 2ஆவது வெளிநாட்டு சுற்றுப் பயணத்தில் அவர் விலக்கப்பட்டுகிறார்.

(5)

## ஐ.பி.எல். தொடர் பனீசர் இல்லை

(லண்டன்)

இங்கிலாந்து அணியின் சுழல் பந்து வீச்சாளர் பனீசருடன் சேர்த்து 12 வீரர்கள் ஐ.பி.எல். தொடரில் இடம் பெறும் வாய்ப்பை இழந்தனர்.

ஐ.பி.எல். தொடரின் இரண்டாவது போட்டித் தொடர் எதிர்வரும் ஏப்ரலில் நடக்க இருக்கிறது. இதற்காக புதிய வீரர்களை ஏலம் எடுக்கும் பணிகள் நடந்து வருகிறது.

இதில் 19 இங்கிலாந்து வீரர்களுடன் சேர்த்து மொத்தம் 111 வீரர்கள் களத்தில் இருந்தனர். இறுதியில் பீற்றர்சன்,பிளின்டொப் உட்பட 43 வீரர்கள் தேர்வாகி உள்ளனர்.

இதில் பனீசர்,ஹார்மிசன், இயன்பெல் உட்பட பல இங்கிலாந்து வீரர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

(5)

## கஞ்சா பயன் படுத்தினாரா? புதிய சர்ச்சையில் பெல்ப்ஸ்

அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கெல் பெல் ப்ஸ் சர்ச்சையில் சிக்கியுள்ளார். கஞ்சா பயன் படுத்தியதாக அவர் மீது குற் றம் சாட்டப்பட் டுள்ளது.அமெரிக்காவின் மைக்கெல் பெல்ப்ஸ் 2008ஆம் ஆண்டு பீஜிங்கில் நடந்த ஒலிம் பிக்கில் நீச்சல் போட்டிகளில் எட்டு தங்கப்பதக்கங்களை வென்று சாதனை படைத்தார்.

அண்மையில் ஒருபத்திரிகையில் மைக் கெல் பெல்ப்ஸ் மாரிஜுவனா பைப்புடன் (சிகரெட் போன்ற புகை பொருட்களை புகைக்க பயன்படுத்தப்படும் குழாய்) இருந்த காட்சி வெளியானது. இதனை தொடர்ந்து அந்த மாரிஜுவனா பைப்பில் தடை,செய்யப்பட்ட போதை வஸ் துக்கள் இருந்ததாகவும், பெல்ப்ஸ் போதை பொருட்களை பயன்படுத்துகிறார் எனவும் புகார் எழுந்துள்ளது.

இது குறித்து விசாரணை நடத்தி வரு வதாக ரிச்லாண்ட் மாகாண ஷெரீப் தெரிவித்துள்ளார். மேலும் பெல்ப்ஸ் மரிஜுவானா பை ப்பை உபயோகப்படுத்துவது நிரூபிக்கப்பட்டால் மற்றவர்களுக்கு என்ன தண்டனை விதிக்கப்படுமோ அதே தான் பெல்ப்ஸுக்கும் வழங்கப்படும் என திட்டவட்டமாக தெரிவித் துள்ளார்.

இதேவேளை தான் மாரிஜுவனா பைப் புடன் இருந்தபோது எடுக்கப்பட்ட படம் பத்திரிகையில் வெளியானதையடுத்து பெல்ப்ஸ், அதனைப் பயன்படுத்தியது உண்மையென வும் அதற்காக மன்னிப்புக் கேட்பதாகவும் தெரி வித்துள்ளார்.

அத்துடன் ஒலிம்பிக் நடைபெற்ற காலப் பகுதியில் தான் அதுபோன்ற போதை வஸ்துக்களை பயன்படுத்த வில்லை எனவும் பெல்ப்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

## தொடரை முழுமையாக சிம்பாவே அணி சுவீகரித்தது

ஐந்தாவது ஒருநாள் போட்டியிலும் 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் கென்ய அணியை வீழ்த்தி தொடரை 5:0 என்ற கணக்கில் முழுமையாக சுவீகரித்தது சிம்பாவே அணி. கென்யாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிம்பாவே அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது.

இதில் முதல் நான்கு போட்டிகளில் வெற்றி பெற்ற சிம்பாவே அணி தொடரில் 4:0 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது.

இந் நிலையில் ஐந்தாவதும் இறுதியுமான போட்டி நேற்று ஜிம்ஹானாவில் நடைபெற்றது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கென்ய அணி 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 199 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஒபுயா 75 ஓட்டங்களையும் புயூடியா 40 ஓட்டங்களையும் ஒற்ரினோ 27, வோற்ரஸ் 26 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் கிறீமர் 4 விக்கெட்டுக்களையும் பிறைஸ், மஷஹட்ஷா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் டபென்ங்வா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 200 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி மஷஹட்ஷா-வில்லியம்ஸின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் 35 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 203 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் மஷஹட்ஷா 84 பந்துகளில் (9 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் அடங்கலாக) 84 ஓட்டங்களையும் வில்லியம்ஸ் 64 பந்துகளில் (9 பவுண்டரிகள் அடங்கலாக) 63 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்ததுடன் மற்சி ஹென்ஜேரி 50 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஓங்கொண்டோ, ஓங்ஜங்கோ மற்றும் வராஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 5:0 என்ற கணக்கில் சிம்பாவே அணி முழுமையாக கைப்பற்றியது. சொந்த மண்ணில் ஒரு போட்டியிலாவது வெற்றிபெற போராடியும் கென்ய அணியால் முடியவில்லை.

## பாலிவூட் பிரபலம் ஷில்பா ஷெட்டி ஐ.பி.எல். அணியை வாங்கினார்



ஐ.பி.எல். அணி நிர்வாகத்தில் மீண்டும் ஒரு பாலிவூட் நட்சத்திரம் நுழைந்து இருக்கிறார். ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் உரிமையில் 12 சதவீத பங்கினை வாங்கி இருக்கிறார் ஷில்பா ஷெட்டி.

ஷாருக்கான் (கொல்கத்தா நைட் ரைடர்ஸ்), பிரீத்தி ஜிந்தா (கிங்ஸ் லெவின் பஞ்சாப்) என இருவரை அடுத்து ஐ.பி.எல். தொடரில் மூன்றாவது பாலிவூட் நட்சத்திரமாக ஷில்பா ஷெட்டி நுழைந்து இருக்கிறார். இந்தியன் பிரிமியர் லீக் சார்பில் (ஐ.பி.எல்.) இருபது-20 தொடரின் இரண்டாவது கட்ட போட்டிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடக்க இருக்கிறது.

இந் நிலையில் வீரர்கள் பரிமாற்றம் தற்போது நடந்து வருகிறது. அவுஸ்திரேலிய சுழல் ஜாம்பவான் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியில் தென்னாபிரிக்க அணியின் தலைவர் சிமித், சகலதுறை வீரர் வோட்ஷன் உட்பட பல பிரபல வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

கடந்த தொடரில் இந்த அணி சம்பியன் கோப்பையை கைப்பற்றி இருந்தது. இதனிடையே இந்த அணியின் 12 சதவீத பங்கினை பாலிவூட் நட்சத்திரம் ஷில்பா ஷெட்டி தன்னுடைய லண்டன் தொழில் அதிபர் பங்காளர் ராஜ் குந்தனுடன் இணைந்து ரூபாய் 57 கோடி கொடுத்து வாங்கி இருக்கிறார்.

இது குறித்து ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் உரிமையாளர் மனோஜ் பதலே கூறியதாவது; நாங்கள் நல்ல திறைமையான பங்காளரை தேடிவந்தோம். எங்கள் அணியின் உரிமையை உலகளாவிய அளவில் கொண்டு செல்ல விரும்பினோம்.


ஷில்பா ஷெட்டி,ராஜ் குந்தன் இருவரும் இணைந்து அணியின் 12 சதவீத பங்கினை வாங்கி இருக்கிறார்கள். கடந்த ஆண்டு பங்கேற்ற அணிகளில் இது இரண்டாவது பிரபலம் வாய்ந்த அணி; ஆனால் முதன்மையான அணி.

### புதிய வீரர்கள்

இந்தியாவில் கிரிக்கெட் பிரபலம். புதிய வீரர்களை உருவாக்கும் முயற்சியில் இந்த ஆண்டு 9 வீரர்களை அறிமுகம் செய்ய இருக்கிறோம். இது தொடர்பாக அணித்தலைவர் வோர்ன் பலமுறை இந்தியாவுக்கு வந்து சென்றுள்ளார்.

பாகிஸ்தான் வீரர்கள் வராதது குறித்து கவலை இல்லை. நாங்கள் எந்த குறிப்பிட்ட வீரர் மீதும் ஆர்வம் காட்டுவதில்லை. 43 வீரர்களுடன் பங்கேற்க இருக்கும் எங்கள் அணி சரியான திறமையுடன் இருக்குமாறு பார்த்துக் கொள்வோம். இவ்வாறு மனோஜ் தெரிவித்தார்.

## எண் விளையாட்டு-03



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்களில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத்தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாக வரவேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத்தொகை இடப்புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக் கூடாது.

### நேற்றைய பகுதிக்கான விடை



# கட்சியிலிருந்து முரளிதரன் எம்.பியை நீக்குவதற்கு ரி.எம்.வி.பி. தீர்மானம்

நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி முரளிதரனை தமது கட்சியிலிருந்து நீக்குவதற்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் செயற்குழு தீர்மானித்துள்ளதாக அக்கட்சியைச்சேர்ந்த எட்வின் சில்வா கைலேஸ்வரராஜா தெரிவித்துள்ளார்.

கட்சியின் பொதுச் செயலாளர் என குறிப்பிட்டு அவர் இது தொடர்பாக ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆங்கில ஊடகமொன்றுக்குப் பேட்டியளித்த நாடாளுமன்ற உறுப்பினர் வி.முரளிதரன், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் உத்தியோகபூர்வ தலைவரும் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சருமான சிவனேசத்துரை சந்திரகாந்தனை விமர்சனம் செய்திருந்தமை தொடர்பாக எமது கட்சியின் செயற்குழு, கட்சியின் செயலகத்தில் அவசரமாக கூடி ஆராய்ந்தது.

குறிப்பிட்ட பேட்டியில் கட்சியின் தலைவரையும், கிழக்கு மாகாண சபையையும் அவமதித்தமையை வன்மையாகக் கண்டிப்பதென்றும் 03.01.2009 இல் இருந்து எதிர்வரும் 14 நாட்களுக்குள் கட்சியின் மத்திய குழுவுக்கு இது தொடர்பான விளக்கத்தை அவர் தெரிவிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் வி.முரளிதரன், தலைவரையும்,கிழக்கு மாகாண சபையையும் அவமதித்தமைக்கான காரணமானது திருப்தியான முறையில் இல்லை என கட்சியின் மத்திய குழு கருதும் பட்சத்தில் மத்திய குழுவில் இருந்து அவரை நீக்குவது என்றும், எவ்வித பதிலும் எதிர்வரும் 17.02.2009ஆம் திகதிக்குள் தெரியப்படுத்தத் தவறும் பட்சத்தில் கட்சி அங்கத்துவத்தில் இருந்து நீக்குவதோடு கட்சியிலிருந்தும் வெளியேற்றப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க வோல்ஸ்ரீட் சஞ்சிகைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி முரளிதரன் அளித்த பேட்டியில், மாகாண முதலமைச்சராக கடமையாற்றக் கூடிய தகுதிகள் பிள்ளையான் எனும் சிவநேசத்துரை சந்திரகாந்தனிடம் காணப்படவில்லை என்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் என்னமும் தமது பயங்கரவாத பண்புகளை முழுமையாக கைவிடவில்லை என்று கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

# புதுக்குடியிருப்பு மருத்துவமனை படையினரின் சரியான இலக்கு

## பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

புதுக்குடியிருப்பு மருத்துவமனை ஒரு நியாயபூர்வமான இராணுவ இலக்கு என்றும் அதன் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் சரியானதுதான் என்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய 'ஸ்கை' ஒலிபரப்புச் சேவைக்கு வழங்கிய நேர்காணலில் இதனைச் தெரிவித்துள்ளார்.

மக்களின் பாதுகாப்பு தொடர்பான கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த கோத்தபாய ராஜபக்ஷ, பொதுமக்கள் அங்கு இல்லை. இருப்பவர்கள் எல்லோரும் பயங்கரவாதிகள்தான் என்றார். புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் புலிகள் தான் சிகிச்சை பெறுகின்றனர். அதனால் அங்கு அனைத்துலக தொண்டு நிறுவனங்கள் பணியாற்றவேண்டும் என்ற தேவை இல்லை. படையினரின் தாக்குதல் இலக்கு ஒருபோதும் தவறியது கிடையாது எனவும் கூறினார்.

இதேவேளை,கடந்த வாரம் உடையார்கட்டு மருத்துவமனை தாக்கப்பட்டு தமிழர்கள் கொல்லப்பட்டது தொடர்பாக பி.பி.சி நிறுவனத்திற்குப் பேட்டியளித்த பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார, புதுக்குடியிருப்பில் மருத்துவமனை இயங்கும்போது மக்கள் ஏன் உடையார்கட்டு மருத்துவமனைக்கு போகவேண்டும்? எனக் கேட்டிருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இலங்கைக்கு...

வைக்கப்பட்டுள்ள சுதந்திரதினச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலும், உலகின் வெவ்வேறு நாடுகளிலும் வாழ்கின்ற இலங்கையர்கள் இன்று தமது 61ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுகின்றனர்.

அவர்களுக்குஎன்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.இலங்கை மக்களுடன் நட்புறவு கொள்ள அமெரிக்கா விரும்பி நிற்கின்றது.

இந்த ஆண்டு ஜனநாயகம், சுதந்திரம், ஒற்றுமை மற்றும் மனித உரிமைகளுக்கான மதிப்பு என்பன தழைக்கும் ஆண்டாக அமையதாம் வாழ்த்துவதாக பராக் ஒபாமா தமது சுதந்திரதினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.(ச-3,5)

## புதுக்குடியிருப்பு மருத்துவமனை நோயாளிகள் வேறு இடத்திற்கு மாற்றம்

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 300 நோயாளிகள் மற்றும் தமது அமைப்பின் 20 பணியாளர்கள் ஆகியோரை இடம் நகர்த்தியுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. முல்லைத்தீவில் உள்ள புதுமாத்தலன் என்ற இடத்திற்கு வைத்தியசாலை இடம் நகர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த சில நாட்களாக புதுக்குடியிருப்பு வைத்தியசாலைமீது கடும் எறிகணைத்தாக்கு தல்கள் மேற்கொள்ளப்பட்டதாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் குற்றம் சுமத்தியுள்ள மை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## நோயாளர்களை கொண்டு செல்ல...

கவனிப்பதற்கென ஒரு தனிப்பிரிவு அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நோயாளிகளைக் கவனிப்பதற்கு மேலதிக ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

வன்னிப் பகுதியிலிருக்கும் நோயாளிகளை வவுனியாவுக்கு அழைத்து வரும் பொருட்டு அங்கு நடைபெறும் மோதல்கள் நாளை (இன்று) நிறுத்தப்படுமென்று சுகாதாரத்துறைச் செயலாளர் என்னிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடமும் தெரிவித்துள்ளோம்.

வன்னியிலுள்ள நோயாளிகளை வவுனியாவிற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கை செஞ்சிலுவைச் சங்கம் மூலம் மேற்கொள்ளப்படும். மோதல் நிறுத்தம் எவ்வளவு நேரம் மேற்கொள்ளப்படும் என்று என்னால் சொல்ல முடியாது.

ஆனால் சுகாதாரத்துறைச் செயலர் மோதல் நிறுத்தம் 6 மணிநேரம் அமுலில் இருக்கும் என்று என்னிடம் தெரிவித்தார்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகளிற்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும் யுத்த நிறுத்தம் ஆரம்பமாகும் நேரம் குறித்து அவர் எதனையும் தெரிவிக்கவில்லை. (ச-5)

## வன்னியில்...

என்ற இடத்தில் முன்னேறி நிலைகொண்டிருந்த படையினரின் நிலைகள் மீது நேற்று முன்தினம் வெடிமருந்து நிரப்பப்பட்ட ஊர்தி மூலம் இரண்டு கரும்புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என விடுதலைப் புலிகள் தெரிவித்ததாக அதில் கூறப்பட்டுள்ளது. (எ-5)

## ஐ.நாவின் விசேட பிரதிநிதி...

சாமுவேலை அனுப்புவதற்கே ஐ.நா. செயலாளர் நாயகம் தீர்மானித்திருப்ப தாகத் தெரியவருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகாரத் திணைக்களத்தின் தெற்காசியப் பிராந்தியத்துக்கான பொறுப்பதிகாரியாக சாமுவேல் தற்பொழுது செயற்பட்டு வருகிறார்.

இலங்கையில் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டிருக்கும் இராணுவ மற்றும் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக முக்கிய தரப்பினரை சந்தித்து சாமுவேல் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் மோதல்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் இடங்களுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை அறிந்து கொள்வதற்கும் அவர் தீர்மானித்திருப்பதாகவும் கொழும்பில் உள்ள ஐ.நா.தூதரகம் சாமுவேலுக்கு மேலதிக விபரங்களை விளக்கிக் கூறுவார்கள் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தனது இலங்கை விஜயத்தில் அறிந்து கொண்ட மற்றும் சேகரித்த விபரங்களை உள்ளடக்கிய விரிவான அறிக்கையொன்றை சாமுவேல், ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் கையளிப்பார் எனக் கூறப்படுகிறது.

அத்துடன் இலங்கையின் நிலைமைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கும் சாமுவேல் பிறிதொரு அறிக்கையைச் சமர்ப்பிப்பார் எனத் தெரியவருகிறது. (ச-5)

## சாலை பகுதியை...

துள்ளதாக படைத்தரப்பு தெரி விக்கின்றது.

இதில் புலிகளின் தரப்பில் 14 உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் 6 பேர் படுகாயமடைந்துள்ளதாக அவ்வியக்கத்தினரது தகவல் பரிமாற்றங்களின் போது தெரியவந்துள்ளது. அத்துடன் இரு தரப்பு மோதலில் படைத்தரப்புக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் இரு தரப்புக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இதில் இராணுவத்தினருக்கு உதவும் வகையில் விமானப் படையினரது குண்டுவீச்சு விமானங்களும் தாக்குதல்களை நடத்தி ஒத்துழைத்ததாகவும் ஊடக நிலையம் தெரிவித்தது.

இது தொடர்பில் பாதுகாப்புக்கான ஊடக, நிலையம் மேலும் கூறியதாவது, சாலை மேற்குப் பகுதியினூடாக முன் நகர்வு முயற்சியினை மேற்கொண்ட இராணுவத்தின் 55-வது, 58-வது படையணியினர் நேற்று முன்தினம் அதிகாலை முதல் மேற்கொண்ட முன் நகர்வு முயற்சியின் பயனாகவே அப்பகுதி முழுவதும் தற்போதுசுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இதன்போது படையினர் மேற்கொண்ட தாக்குதல்களுக்கு புலிகள் நடத்திய பதில் தாக்குதலையடுத்து மோதல் உக்கிரமடைந்துள்ளது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு, புதுக்குடியிருப்பு, இராமநாதபுரம்போன்ற பகுதிகளிலும் இருதரப்புக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இதனை அடுத்து நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது புலி உறுப்பினர்களின் இரு சடலங்கள் உட்பட ஆயுதங்கள் பலவும் மீட்கப்பட்டன.

அத்துடன் கரும்புலிகளின் தற்கொலைப் பிரிவினரின் முகாம்ஒன்றையும் கண்டுபிடித்துள்ளனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு களப்புக்கு அருகில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் இலக்கொன்றின் மீது விமானப்படைக்குச் சொந்தமான மிக் -27 ரக தாக்குதல் விமானங்கள் குண்டுகளை வீசி தாக்குதல்களை நடத்தியுள்ளன.

இதில் புலிகளின் ராடர் மத்திய நிலையமொன்று முற்றாக அழிவடைந்துள்ளதாக தாக்குதலில் ஈடுபட்ட விமானப்படையினர் உறுதி செய்துள்ளனர். (ச-5)

## ஈழத்தமிழர் படுகொலையைக்...

இயக்கப்பட்ட போதிலும் அவற்றில் பயணிகளின் கூட்டம் மிக மிகக் குறைவாகவே இருந்தது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், விடுதலைச் சிறுத்தைகள், தமிழர் தேசிய இயக்கம் ஆகிய கட்சிகள் அங்கம் வகிக்கும்இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் நேற்றைய முழு அடைப்பு போராட்டத்துக்குஅழைப்புவிடுக்கப்பட்டிருந்தது.

இதற்கு பாரதிய ஜனதா, அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி உட்பட ஏராளமான அரசியல் கட்சிகளும் வணிக, மாணவர் அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்திருந்தன.

முழு அடைப்பு போராட்டம் சட்டத்திற்கு எதிரானது என்றும் மறியல் போராட்டத்தில் ஈடுபடுவோரும், கடைகளை அடைக்கக்கோருவோரும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள் என்றும் தமிழகக் பொலிஸார் சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால், இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் தமிழகம் முழுவதும் உள்ள மக்கள் தன்னெழுச்சியாக முழு அடைப்பு பேராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்ததாக கூறப்பட்டது.

தனியார் பேருந்து சேவைகள் போன்றவையும் முழு அடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டன. பல இடங்களில் ரயில் மறியல் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இதனால் பல ரயில்கள் தாமதமாக இயங்கின.

அரச பணியாளர்களில் பெரும்பாலானோர் பணிக்குச் செல்லவில்லை. உழைக்கும் பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்த பலரும் ஈழத் தமிழருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வேலைக்குச் செல்லாமல் புறக்கணித்தனர்.

வழக்குரைஞர்கள், மாணவர்கள் போன்றோரும் போராட்டத்துக்கு முழு ஆதரவு அளித்தனர்.

போராட்டம், சாலை மறியல் போன்றவற்றில் ஈடுபட்டதாக பல்லாயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். அதிகளவாக திருவண்ணாமலையில் 5 ஆயிரத்து 200 பேரும் இராணிப்பேட்டையில் 2 ஆயிரம் பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-5)

## புதுக்குடியிருப்பு மருத்துவமனை...

இது தொடர்பாக கோர்டன் வைஸ் பி.பி.சி. தமிழோசைக்கு கூறியதாவது, இலங்கையின் வடக்கே மோதல்கள் நடக்கின்ற பகுதியில் கடந்த 24 மணிநேரத்தில் 50க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இந்த மோதல்களில் கொத்தணிக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை யார் பயன்படுத்தினார்கள் என்பது எமக்குத் தெரியவில்லை.

கொத்தணி வெடிபொருட்கள் ஆட்டிலறி ஷெல்கள் மூலம் ஏவப்படலாம். இரண்டு தரப்பும் அத்தகைய ஷெல்களைப் பயன்படுத்துகின்றன.

இருதரப்புக்கும் அந்த வசதி இருக்கின்றது. எவை யாரால் ஏவப்பட்டதென்று தெரியாது.இப்பகுதியில் செயற்பட்டுவந்த முக்கிய மருத்துவமனையும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டது.

எனக்கு மிகவும் மனவருத்தத்தை தருகின்ற விடயம் என்னவெனில் எங்களுடைய பணியாளர்கள் கடந்த 18 மணித்தியாலங்களாக எறிகணை வீச்சுக்களுக்கு மத்தியில் புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு அருகே தற்பொழுது பதுங்கு குழிக்குள் தங்கியிருக்கிறார்கள். வன்னிப்பகுதியில் இருந்த கடைசி மருத்துவமனையும் மூடப்பட்டுவிட்டது.

கடுமையாகக் காயமடைந்த மற்றும் காயமடைந்த போதிலும் நடக்கக் கூடியவர்கள் வடக்கு நோக்கி நகர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

மருத்துவமனையில் இருந்து வெளியேறியவர்கள் வன் செயல்கள் நடக்கும் இடங்களில் அகப்பட்டிருக்கிறார்கள்.

அவர்கள் பாதுகாப்பான இடத்தை சென்றடைய வேண்டும் என்பதே எமது விருப்பம் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீது கொத்தணிக் குண்டுகள் வீசப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை அதிகாரி வெளியிட்ட தகவல்களை இலங்கை அரசு மறுத்துள்ளது.

இது தொடர்பாக பி.பி.சிக்கு கருத்துத் தெரிவித்த வெளியுறவு அமைச்சின் செயலாளர் பாலித கோஹன்ன, விடுதலைப் புலிகள் தமது மோட்டார், ஆட்டிலறி உள்ளிட்ட பெரும் தளபாடங்களைக் குவித்து வைத்திருக்கிறார்கள்.

இந்த ஆயுத தளபாடங்களையே நாங்கள் குண்டுவீசித் தாக்குகின்றோம். இந்தச் சண்டையை நாங்கள் தமிழ்ப் பொதுமக்களுக்கு எதிராக நடத்தவில்லை.

மக்களைப் புலிகள் ஒரு சிறிய இடத்திற்குள் அடைத்துவைத்து மனிதக் கேடயங்களாக பயன்படுத்துவதே அவர்களின் நோக்கமென்றார்.

புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்களும் தாதியர்களும் அரச ஊழியர்களாக இருக்கும்போது நாங்கள் ஏன் அங்கு தாக்குதல் நடத்த வேண்டும்.

அரசாங்கத்தின் கரங்களில் வெற்றிப் பரிசு கிடைக்கப்போகும்இத்தருணத்தில் நாங்கள் இவ்வறானா தாக்குதலை நடத்த தேவை இல்லை.

படையினர் கொத்தணிக் குண்டுகள் வாங்கவும் இல்லை. அவர்களிடம் கொத்தணிக்குண்டுகளும் இல்லை. அவர்களிடம் இல்லாத குண்டுகளை வீச முடியாது.

வன்னியில் கொத்தணிக் குண்டு வீசப்பட்டிருந்தால் அது அரசாங்கத் தரப்பில் இருந்து வீசப்படவில்லை என்றும் அவர் கூறினார். (ச-14)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.